**கவனிக்க.**- 2026.06.05 ஆந் திகதிய 2492 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II தமிழ்மொழியில் பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2493 - 2026 ජූනි මස 12 වැනි සිකුරාදා - 2026.06.12

2493 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1804 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1831 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, யூன் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1801 - B 82800- 403 (2026/06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழிமூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரி யாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா.த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு பாடமாக கருதப்படல் வேண்டும். அந்த பாடப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, யூலை மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, மே 13.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| திருகோணமலை | மூதூர் | கொட்டியார் வடக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மூதூர் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |
| திருகோணமலை | மூதூர் | கொட்டியார் தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கொட்டியார் பற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |
| திருகோணமலை | ஈச்சிலம்பற்று (வெருகல்) | ஈச்சிலம்பண்ணை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கொட்டியார் பற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |
| திருகோணமலை | குச்சவெளி | கட்டுகுளம் வடக்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

06-112

---

**சுற்றாடல் அமைச்சு**

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தில் தொடர்பான அதிகாரிகள் சேவையின் தரம் III சட்ட உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026**

கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தில் தொடர்பான அதிகாரிகள் தரம் III இன் சட்ட உதவியாளர் பதவி 01க்கான தேர்வுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி தினத்திற்கு,அதாவது 2026.07.13 ஆந் திகதிக்கு கீழ் காணும் 2 ஆவது பந்தியில் காணப்படும் தகுதிகளை கொண்ட விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தேர்வு முறை:**

1.1 அறிவிப்பில் காணப்படும் தகுதிகள் உள்ள விண்ணப்பதாரர்களுள் தகுதிகாண் திறனாய்வு நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமையின் வரிசை அடிப்படையிலும், வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

1.2 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த அறிவிப்பின் பந்தி இலக்கம் 05இன் கீழ் குறிப்பிடப்பட்ட மதிப்பெண்கள் அளிக்கப்படும் நடைமுறைக்கு அமைய திறமை காண் நேர்முக தேர்வு நடத்தப்படும்.

1.3 ஒருவருக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் ஒரே அளவான மொத்த புள்ளிகள் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் நியமிப்பு அதிகாரியாகிய பணிப்பாளர் ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

1.4 இந்த பதவிக்கான நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நிர்ணயிக்கப்படும்.

2. **தகுதிகள் :**

2.1 **கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் பெற்ற சட்ட இளங்கலைப் பட்டம் அல்லது உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

2.2 **அனுபவம் :**

பொருந்தாது. இருப்பினும், திறனாய்வுத் தேர்வு நேர்காணலின்போது அனுபவத்திற்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.

2.3 **உடல் தகுதிகள்:**

ஒவ்வொரு வேட்பாளரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும், எந்தவொரு கடமையையும் ஆற்றவும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

2.4 **வயது** :

2.4.1. குறைந்தபட்ச : 21 வயதுக்குக் குறையாமல்
2.4.2. அதிகபட்ச வயது : 35 வயதுக்கு மிகையாமல் இருத்தல்

2.5 **ஏனையவை :**

2.5.1. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
2.5.2. விண்ணப்பதாரர்கள் சிறந்த குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும்.
2.5.3. இப்பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான 2.1 முதல் 2.5 வரையிலான தகுதிகள், விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பில்/வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. **பணி நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் :**

3.1 இப்பதவி ஒரு நிரந்தர ஓய்வூதியப் பதவியாகும்.
3.2 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.
3.3 தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தீவிற்குள் குறிப்பிடப்பட்ட எந்தவொரு பகுதியிலும் பணியாற்ற வேண்டும்.
3.4 மொழித் தேர்ச்சி:

3.4.1. **அரசு மொழித் தேர்ச்சி:**
ஆங்கில மொழி மூல நியமனம் பெறும் ஓர் அதிகாரி, தனது தகுதிகாண் காலத்தில் சிங்களம் அல்லது தமிழ் ஆகிய மொழிகளில் ஒன்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இந்தத் தேர்ச்சி நிலை என்பது, சிங்களம்/தமிழை ஒரு முக்கியப் பாடமாகக் கொண்டு (இரண்டாம் மொழியாகவோ அல்லது விருப்பப் பாடமாகவோ அல்லாமல்) க.பொத (சா.த.) தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் நடத்தப்படும் சிறப்புத் திறன் தேர்வில் தேர்ச்சி பெறுதல்.

3.4.2. **வேறு அரசு மொழித் தேர்ச்சி:**

| *தேர்ச்சி பெற வேண்டிய காலம்* | *பெற வேண்டிய தேர்ச்சி நிலை* | *மொழித் தேர்ச்சி* | |
|---|---|---|---|
| | | *சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட மொழி* | *தேர்ச்சி பெற வேண்டிய மொழி* |
| பணியில் சேர்ந்த முதல் மூன்று (3) ஆண்டுகளுக்குள், | அரசாங்க சேவை சுற்றறிக்கை எண் 07/2007 மற்றும் அதன் துணை சுற்றறிக்கைகளின்படி உரிய மொழித் தேர்ச்சி நிலையைப் பெற்றிருக்க வேண்டும். | சிங்களம் | தமிழ் |
| | | தமிழ் | சிங்களம் |
| | | ஆங்கிலம் | உப உட்பிரிவு 3.4.1-இன் கீழ் தேர்ச்சி பெற்ற அரச கரும மொழியைத் தவிர மற்ற அரச கரும மொழிகள் |

4. **சம்பள அளவுத் திட்டம் :**

பொது நிர்வாக சுற்றறிக்கை இல. : 10/2025-இல் MN 4 இன் படி, இந்தப் பதவிக்கான சம்பள அளவு ரூபா 53,060.00 - 10X800-11X1,190-10X1,320-5X1,350- ரூ. 94,100.00 ஆகும். (25.03.2025 ஆந் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2025-இன் அட்டவணை II இல் கூறப்பட்டுள்ளபடி இச் சம்பளம் வழங்கப்படும்.)

5. **திறனாய்வுத் தேர்வு நேர்காணலுக்குப் பின்வரும் மதிப்பெண் முறை பயன்படுத்தப்படும்.**
**கருத்தியல்கள்-**

| | *விடயம்* | | *அதிகபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகுதிகள்:**<br>பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற சட்டப் பட்டம்<br>-முதல் வகுப்பு தேர்ச்சிக்கு | 15 | 15 |
| | -இரண்டாம் வகுப்பு உயர் தேர்ச்சிக்கு | 12 | |
| | -இரண்டாம் வகுப்பு கீழ் மட்ட தேர்ச்சிக்கு | 10 | |
| | சட்டக்கல்லூரி இறுதி ஆண்டில் முதல் வகுப்பு தேர்ச்சி | 15 | |
| | சட்டக்கல்லூரி இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்பு தேர்ச்சி | 10 | |
| | குறிப்பு: இறுதித் தேர்வில் சிறப்புத் தேர்ச்சியுடன் தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே 10 மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும். (உயர்ந்த பட்ச தகுதிக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும் - பட்டம் அல்லது சட்டக் கல்லூரி தகுதிகளில் ஒன்றுக்கு மட்டும்) | | |
| 02 | தொழில்முறைத் தகுதிகள் (அதிகபட்ச மதிப்பெண்கள்)<br>பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு வருட கால அளவு கொண்ட முதுகலை பட்டம் அல்லது சட்ட டிப்ளோமா படிப்பு (ஒவ்வொரு டிப்ளோமாவிற்கும் தலா 05 மதிப்பெண்கள்)<br>அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் குறைந்தது 06 மாத கால அளவு கொண்ட டிப்ளோமா படிப்பு (ஒவ்வொரு டிப்ளோமாவிற்கும் தலா 03 மதிப்பெண்கள்)<br>அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் குறைந்தது 03 மாத கால அளவு கொண்ட சான்றிதழ் படிப்பு பாடநெறி (ஒவ்வொரு பாடநெறிக்கும் தலா 02 மதிப்பெண்கள்) | | 20 |
| 03 | **மேலதிக அனுபவம்:**<br>அரசாங்க அல்லது தனியார் துறையில் பெற்ற அனுபவம்<br>- ஆண்டுக்கு 05 மதிப்பெண்கள் வீதம் அதிகபட்சம் 20 மதிப்பெண்கள்<br>- 6 மாதங்களுக்கு மேல் ஒரு ஆண்டுக்கு குறைவான- 02 மதிப்பெண்ககள்<br>(அடிப்படைத் தகுதிகளைப் பெறுவதற்குத் தேவைப்படும் சட்டத்தரணியாக பணியாற்றிய 03 வருடப் பணி அனுபவம் நீங்கலாக)<br>(குறைந்தது 20 வருடப் பணி அனுபவம் கொண்ட ஒரு வழக்கறிஞர் அல்லது குடியரசு சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிபதியிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவம் நிரூபிக்கப்பட வேண்டும். அதில் கட்டாயமாக முத்திரை இடப்பட்டிருக்க வேண்டும்.) | | 20 |

| | *விடயம்* | | *அதிகபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| 04 | **மொழி அறிவு - ஆங்கிலத்தில் புலமை** | | 20 |
| | ஆங்கில வழிக் கல்வி மூலம் பெறப்பட்ட முதுகலைப் பட்டம்/இளங்கலைப் பட்டம்/முதுகலைப் சட்டப் பட்டம் / இளங்கலைச் சட்டப் பட்டம் (தொடர்புடைய அனைத்துத் தேர்வுத் தாள்களுக்கும் ஆங்கிலத்தில் பதிலளிக்கப்பட்டிருக்க வேண்டும்.) | 20 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி டிப்ளோமா படிப்புக்கு (01 ஆண்டு அல்லது 1500 மணிநேரம்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொண்ட ஆங்கில மொழிச் சான்றிதழ் படிப்புக்கு | | |
| | 06 மாதங்கள்/720 மணிநேரம் | 07 | |
| | 03 மாதங்கள்/360 மணிநேரம் | 05 | |
| 05 | **தகவல் தொழில்நுட்ப அறிவு:** | | 20 |
| | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுவதற்கு தகவல் தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய பாடமாகப் படித்திருக்க வேண்டும் | 20 | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் குறைந்தது 01 ஆண்டு கால அளவு கொண்ட தகவல் தொழில்நுட்ப பட்டயப் படிப்பு அல்லது 1500 மணிநேரப் படிப்பு | 10 | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் படிப்பு | | |
| | 06 மாதங்கள்/720 மணிநேரம் | 07 | |
| | 03 மாதங்கள்/360 மணிநேரம் | 05 | |
| 06 | நேர்காணல் குழுவின் விருப்பப்படி தலைமைப் பண்பு மற்றும் தொடர்பாடல் திறன்கள்: | | 05 |
| | மொத்தம் | | 100 |

மேற்கண்ட தகுதிகள் எழுத்துபூர்வமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

6. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :**

6.1 அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே திறனாய்வு நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

6.2 அனைத்துச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளும், முறையாகச் சான்றளிக்கப்பட்ட பிரதிகளும் நேர்காணலின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6.3 விண்ணப்பதாரர்கள் நேர்காணலின்போது பின்வரும் அடையாள ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

6.3.1. ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;
6.3.2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
6.3.3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

7.1 விண்ணப்பமானது, இந்த அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி, A4 அளவு தாளில் தயாரிக்கப்பட வேண்டும். முதல் பக்கத்தில் 01 முதல் 06 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 07 முதல் 09 வரையிலும், மூன்றாம் பக்கத்தில் 10 முதல் 11 வரையிலும் விண்ணப்பத் தலைப்பு எண்கள் இடப்பட்டு, ஒருவரின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்களும், முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப் படிவத்தின் ஒரு நகலை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்)

7.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு 2026.07.13 ஆந் திகதிக்கு முன்னரோ அல்லது அன்றோ, பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், அஞ்சல் பெட்டி 556, புதிய செயலாளர் அலுவலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில், “கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தில் சட்ட உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026” என்று மேலெழுதப்பட வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படாது.

7.3 விண்ணப்பத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம், ஒரு அரசாங்கப் பாடசாலை அதிபர் /சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/வழக்கறிஞர்/பிரசித்த நொத்தாரிசு / ஆயுதப் படைகளின் ஆணையிடப்பட்ட அதிகாரி அல்லது அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியில் இருந்து மாதம் ரூ. 82,150.00 ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அதிகாரி ஒருவரினால் சான்றளிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல்** :

ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பப் படிவத்தில் வழங்கிய ஏதேனும் தகவல் தவறானது அல்லது பிழையானது எனக் கண்டறியப்பட்டால் அல்லது ஆட்சேர்ப்புக்கு முன்னர் பிழையானது எனக் கண்டறியப்பட்டால், அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பிறகு அத்தகைய தவறான அல்லது பிழையான தகவல் கண்டறியப்பட்டால், அவர் உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டு அரசாங்கப் பணியிலிருந்து நீக்கப்படுவார்.

- இந்த அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பதிப்புகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், சிங்களப் பதிப்பே செல்லுபடியாகும்.

பேராசிரியர் பி. பி. டர்னி பிரதீப் குமார,
பணிப்பாளர் நாயகம்,
கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள
முகாமைத்துவ அமைச்சு.

2026, யூன் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுற்றாடல் அமைச்சு**

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தில் தொடர்பான அதிகாரிகள் சேவையின் தரம் III சட்ட உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு./திருமதி/செல்வி.)

..........................................................................................................................................

தமிழில் :..........................................................................................................................

ஆங்கிலத்தில் :...................................................................................................................

1.1. முதலெழுத்துக்களுடன் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்)

தமிழில் :..........................................................................................................................

ஆங்கிலத்தில் :...................................................................................................................

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :...........................................................................................

3. பிறந்த திகதி :

ஆண்டு:………… மாதம்:…………………………….…… திகதி:……………….………

4. பால் நிலை : (பெண் - 1 ஆண் - 0 ) ☐

5. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :

……………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………

6. தொலைபேசி இலக்கம் : வதிவிட தொலைபேசி ........................கைபேசி:……………………………

7. கல்வித் தகைமைகள் :

7.1 க.பொத (உ/த) பரீட்சை பற்றிய விபரங்கள் :

1. பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம்
2. சுட்டிலக்கம்
3. தேர்ச்சி பெற்ற ஆண்டு

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |

7.2. பதவிக்குத் தொடர்புடைய தகைமைகள் :

| *தொடர்புடைய தகைமைகள்* | *பெற்ற கல்வி நிறுவனங்கள்* | *செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|
| | | |

7.3. மேலதிக தகைமைகள் :

8. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா? ஆம்/இல்லை

8.1. ஆம் எனில், விவரங்களைக் குறிப்பிடவும் :
……………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………

9. விசாரிக்கக்கூடிய உறவினர் அல்லாதவர்கள் :

1. பெயர் :
பதவி :
முகவரி:
தொலைபேசி இல. :

2. பெயர்:
பதவி :
முகவரி:
தொலைபேசி இல. :

10. **விண்ணப்பதாரரின் உறுதியுரை** :

(அ) இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன்.

(ஆ) நான் அளித்த அறிக்கை பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், நான் பணியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவேன் என்றும், நியமனத்திற்குப் பிறகு அது நிரூபிக்கப்பட்டால், பணியிலிருந்து நீக்கப்படுவதற்குப் பொறுப்பாவார் என்றும் இதன்மூலம் நான் அறிவிக்கிறேன்.

(இ) இதில் கொடுக்கப்பட்டுள்ள எந்தத் தகவலையும் நான் மாற்ற மாட்டேன்.

…………………………….. ……………………………….
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ………………………………………………………..என்னும் நபர் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்தவர் என்றும், அவர் ……………………… ஆந் திகதி என் முன்னிலையில் மேலே உள்ள பந்தி 10இன் கீழ் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் நான் சான்றுப்படுத்துகிறேன்.

……………………………..
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்

திகதி :

சான்றுப்படுத்துபவரின் பெயர் :

பதவி :

முகவரி :
(அலுவலக முத்திரையால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

06-120

---

**சுற்றாடல் அமைச்சு**

## கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின், ஆரம்ப பகுதித் திறன் சேவைப் பிரிவில் சுற்றுலா பங்களா பராமரிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026

கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின், ஆரம்ப பகுதித் திறன் சேவைப் பிரிவில் உள்ள 04 சுற்றுலா பங்களா பராமரிப்பாளர் பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக, பந்தி 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதியான 2026.07.13 அன்று விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை:**

1.1 அறிவிப்பில் காணப்படும் தகுதிகள் உள்ள விண்ணப்பதாரர்களுள் தகுதிகாண் திறனாய்வு நேர் முகப்பரீட்சையில் காட்டும் திறமையின் வரிசை அடிப்படையிலும், வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் சேவையில் இணைத்துக் கொள் ளப்படுவர்.

1.2 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட இந்த அறிவிப்பின் பந்தி இலக்கம் 05 இன் கீழ்க் குறிப்பிடப்பட்ட மதிப்பெண்கள் அளிக்கப்படும் நடைமுறைக்கு அமைய திறமை காண் நேர்முகத் தேர்வு நடாத்தப்படும்.

1.3 ஒருவருக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் ஒரே அளவான மொத்தப் புள்ளிகள் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் நியமிப்பு அதிகார பணிப்பாளர் ஆணையாளர் நாயகமாகிய எனது முடிவே இறுதியானதாக இருக்கும்.

1.4 இந்தப் பதவிக்கான நியமனம் நடைமுறைப்படுத் தப்படும் திகதி கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத் தின் பணிப்பாளர் நாயகத்தினால் நிர்ணயிக்கப் படும்.

2. **தகைமைகள் :**

2.1 **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் 06 பாடங்களில் கீழ் வகுப்பில் இரண்டு திறமைச் சித்திகளுடன், இரண்டு முறைக்கு மேற்படாமல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2.2 **தொழில்முறைத் தகைமைகள் :**

ஒவ்வொரு பதவியின் கடமைகளுக்கும் ஏற்ப, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தரம் 2 க்குக் குறையாத தேசிய தொழிற்கல்வித் தகுதிகளில் (N.V.Q.) தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

2.3 **அனுபவம் :**

தொடர்புடைய துறையில் உள்ள அனுபவம் ஒரு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

2.4 **உடல் தகுதிகள்:**

சிறந்த குணநலன்களையும் நல்ல உடல் நலத்தையும் கொண்டிருக்க வேண்டும். மேலும் பதவியின் கடமைகளைச் செய்வதற்குப் போதுமான உடல் தகுதியுடன் இருக்க வேண்டும். தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்ற விருப்பமுள்ளவராகவும் இருக்க வேண்டும்.

2.5 **வயது** :

2.5.1. குறைந்தபட்ச வயது : 21 வயதுக்குக் குறையாமல்
2.5.2. அதிகபட்ச வயது : 45 வயதுக்கு மேற்படாமல்

2.6 **ஏனையவை :**

2.6.1. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
2.6.2. விண்ணப்பதாரர்கள் சிறந்த குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும்.
2.6.3. இப்பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான 2.1 முதல் 2.5 வரையிலான தகுதிகள், விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பு/அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப் பட்டிருக்க வேண்டும்.

3. **பணி நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் :**

3.1 இப்பதவி ஒரு நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடியது.
3.2 மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.
3.3 தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தீவிற்குள் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பகுதியில் பணியாற்ற வேண்டும்.
3.4 மொழித் தேர்ச்சி:

3.4.1. **அரசாங்க மொழித் தேர்ச்சி:**

| *மொழி* | *பெறப்பட வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| 01. அரச மொழி | அரச மொழியைத் தவிர வேறு மொழி வழியில் பணியில் சேர்ந்த ஊழியர்கள், தகுதிகாண் காலத்தில் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும். |
| 02. மற்றைய அரச கரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/ 2014 மற்றும் அதன் துணை சுற்றறிக்கைகளின்படி, உரிய அளவிலான தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும். |

4. **சம்பள அளவுத் திட்டம் :**

பொது நிர்வாக சுற்றறிக்கை இல. : 10/2025 இன் PL-2-2025 சம்பளப் பிரிவின்படி, இந்தப் பதவிக்கு மாதச் சம்பள விகிதமாக ரூபா 41,800.00 - 10 x 490 -10 x 540 - 10 x 590 - 12 x 630 - ரூ. 65,560.00 வழங்கப்படும். (25.03.2025 ஆந் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2025 இன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சம்பளம் வழங்கப்படும்.)

5. **திறனாய்வு மதிப்பீட்டு நேர்காணலுக்குப் பின்வரும் மதிப்பெண் முறை பயன்படுத்தப்படும்.**

5.1 திறனாய்வுத் தேர்வு நேர்காணலுக்குப் பின்வரும் மதிப்பெண் முறை பயன்படுத்தப்படும்.

| | *விடயம்* | | *அதிகபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்:**<br>மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்ற பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) | 15 | **15** |
| | இரண்டு பாடங்களில் தேர்ச்சி பெற்ற பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) | 10 | |
| | ஒரு பாடத்தில் தேர்ச்சி பெற்ற பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) | 05 | |
| 02 | **மேலதிக தொழில்முறைத் தகுதிகள் :**<br>உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் ஒரு வருடத்திற்கும் குறையாத டிப்ளோமா படிப்பு | 35 | 35 |
| | உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் 06 மாதங்களுக்கும் குறையாத பட்டயப் படிப்பு | 25 | |
| | உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் 03 மாதங்களுக்கும் குறையாத சான்றிதழ் படிப்புக்கு | 15 | |
| 03 | **மேலதிக அனுபவம்:**<br>தொடர்புடைய துறை சார்ந்த ஒரு நிறுவனத்தில் பணியாற்றிய காலத்தின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.<br><br>- ஆண்டுக்கு அதிகபட்சம் 05 மதிப்பெண்கள்,<br>(45 மதிப்பெண்கள்)<br><br>06 மாதங்களுக்கு மேல் மற்றும் வருடத்திற்கு குறைவெனில் 02 மதிப்பெண்கள்<br><br>(மேலதிக அனுபவமானது, சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட சேவைச் சான்றிதழ் மூலம் உறுதிப் படுத்தப்பட்ட வேண்டும். அதில் முத்திரை இருப்பது கட்டாயமாகும்.) | | 45 |
| 06 | நேர்காணல் குழுவின் விருப்பப்படி தலைமைத்துவம், ஆளுமை மற்றும் தொடர்புத் திறன்கள்: | | 05 |
| | மொத்தம் | | 100 |

மேற்குறித்த தகுதிகள் எழுத்துபூர்வமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

6. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :**

6.1 அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே திறனாய்வு நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

6.2 அனைத்துச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் மற்றும் முறையாகச் சான்றளிக்கப்பட்ட நகல்கள் நேர்காணலின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6.3 விண்ணப்பதாரர்கள் நேர்காணலின் போது பின்வரும் ஆளடையாள அட்டைகளில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் :

6.3.1. ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;
6.3.2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
6.3.3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

7. **விண்ணப்பிக்கும் முறை :**

7.1 விண்ணப்பப்படிவமானது, இந்த அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின்படி இருக்க வேண்டும். மேலும், அது A4 அளவு தாளில், முதல் பக்கத்தில் 01 முதல் 04 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 05 முதல் 08 வரையிலும், மூன்றாம் பக்கத்தில் 09 முதல் 13 வரையிலும் விண்ணப்பத் தலைப்பு எண்களுடன் தயாரிக்கப்பட்டு, உங்கள் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்களும், முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் ஒரு நகலை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.)

7.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், 2026.07.13 ஆந் திகதிக்கு முன்னதாகவோ அல்லது அன்றோ "பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம், அஞ்சல் பெட்டி 556, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில், "கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ துறையில் சுற்றுலா பங்களா பராமரிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026" என்ற வார்த்தைகள் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பிறகு பெறப்படும் எந்த விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7.3 விண்ணப்பத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம், ஒரு அரசாங்கப் பாடசாலை அதிபர் /சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/வழக்கறிஞர்/பிரசித்த நொத்தாரிசு ஆயுதப் படைகளின் கட்டளையிடப்படும் அதிகாரி அல்லது அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியில் இருந்து மாதம் ரூ. 82,150.00 ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அதிகாரி ஒருவரினால் சான்றளிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல்** :

ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பப்படிவத்தில் வழங்கிய ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன்னர் தவறானது அல்லது பிழையானது எனக் கண்டறியப்பட்டால், அவரது விண்ணப்பம் இரத்து செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பிறகு அத்தகைய தவறான அல்லது பிழையான தகவல் கண்டறியப்பட்டால், அவர் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டு அரசாங்கப் பணியிலிருந்து நீக்கப்படுவார்.

- இந்த அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு இருப்பின், சிங்கள உரையே செல்லுபடியாகும்.

பேராசிரியர் பி. பி. தர்னி பிரதீப் குமார,
பணிப்பாளர் நாயகம்,
கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள
முகாமைத்துவ அமைச்சு

2026, யூன் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுற்றாடல் அமைச்சு**

**கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தில் சுற்றுலா பங்களா பொறுப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு**

விண்ணப்பிக்கும் மொழி மூலம்

சிங்களம் - 2

தமிழ் - 3 ☐

ஆங்கிலம் - 4

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு./திருமதி/செல்வி) தமிழில் :

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

ஆங்கிலத்தில் :

…………………………………………………………………………………………………………………………

1.1. முதலெழுத்தில் குறிப்பிடப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்)

தமிழில் :……………………………………………………………………………………………………………

ஆங்கிலத்தில் :………………………………………………………………………………………………………

2. தேசிய ஆளடையாள அட்டை இல. :……………………………………………………………………………………

3. பிறந்த திகதி :

ஆண்டு:………….. மாதம்:……………………………… திகதி:…………………………

4. பால் நிலை : பெண் - 1 ஆண் - 0 ☐

5. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :

……………………………………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………

6. தொலைபேசி இல. : வதிவிட தொலைபேசி :......................கைபேசி:……………………………

7. கல்வித் தகைமைகள் :

7.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

1. பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் :....................................
2. பரீட்சை இல. :....................................................................................
3. பரீட்சை நடைபெற்ற ஆண்டு :..........................................................................

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |
| 5 | | 10 | |

7.2 க.பொ.த. (உ.த) பரீட்சை விபரங்கள் :

1. பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் :....................................
2. சுட்டிலக்கம் :.....................................................................................
3. தேர்ச்சி பெற்ற ஆண்டு :...........................................................................

| *பாடம்* | *தரம்* |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

8. தொழில்முறைத் தகுதி :

.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................

9. பதவிக்குத் தொடர்புடைய அனுபவம் :

.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................

10. ஏதேனும் குற்றச்சாட்டின் பேரில், நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா? ஆம்/ இல்லை

10.1 ஆம் எனில், விபரங்கள் வழங்கவும் :
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................

11. உறவினர்கள் அல்லாத விசாரிக்கக்கூடிய நபர்கள் :

1. பெயர் :.........................................
பதவி :........................................
முகவரி:........................................
தொலைபேசி இல. : ........................................

2. பெயர்: .........................................
பதவி : ........................................
முகவரி: ........................................
தொலைபேசி இல. : ........................................

12. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன்.

(ஆ) நான் அளித்த கூற்று பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், நான் ஆட்சேர்ப்புக்குத் தகுதியிழப்பேன் என்றும், நியமனத்திற்குப் பிறகு அது நிரூபிக்கப்பட்டால், பணியிலிருந்து நீக்கப்படுவதற்குப் பொறுப்பாவார் என்றும் இதன்மூலம் நான் உறுதியளிக்கிறேன்.

(இ) இதில் கொடுக்கப்பட்டுள்ள எந்தத் தகவலையும் நான் மாற்ற மாட்டேன்.

…………………………….. …………………………………..
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

13. விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்கான சான்றிதழ் :

இந்த விண்ணபத்தைச் சமர்ப்பிக்கும் (திரு./திருமதி/செல்வி) ……………………………………………………..என்னும் நபர் தனிப்பட்ட முறையில் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும், அவர்/அவள் ……………………… ஆம் திகதி என் முன்னால் மேலே உள்ள பந்தி 12 இன் கீழ் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் சான்றுபடுத்துகிறேன்.

……………………………..
சான்றுப்படுத்துபவரின்
கையொப்பம்

சான்றுப்படுத்துபவரின் பெயர் :.................................................

பதவி :.................................................

முகவரி :.................................................
(அலுவலக முத்திரையால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

திகதி :.................................................

06-121

---

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதி - 3 தரம் III முன் அச்சு திட்டமிடலாளர், அச்சு தொழில்நுட்பவியலாளர் மற்றும் அச்சு தயாரிப்பாளர் பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பம் கோரல்**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதி - 3 தரம் III முன் அச்சு திட்டமிடலாளர் (Pre Press Planner), அச்சு தொழில்நுட்பவியலாளர் (Printing technician) மற்றும் அச்சு சீராக்குனர் (Post Press Printer) பதவிகளில் உள்ள வெற்றிடங்களை திறந்த ஆட்சேரப்பு முறையின் அடிப்படையில் நிரப்புவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாக, இவ்வறிவிப்பில் கீழே குறிப்பிடப்பட்ட தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களிடமிருந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி திகதி : 2026.07.10.

பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு :

| | |
|---|---|
| முன் அச்சு திட்டமிடலாளர் (Pre Press Planner) | 01 |
| அச்சு தொழில்நுட்பவியலாளர் (Printing technician) | 02 |
| அச்சு சீராக்குனர் (Post Press Printer) | 01 |

1.0 **சேவையில் அமர்த்தும் நிபந்தனைகள் :**

1.1 அரசாங்க சேவையில் நியமனங்களை ஒழுங்கு படுத்தும் பொது நிபந்தனைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள், தாபன விதிக் கோவை விதிகள், நிதி ஒழுங்குகள் மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதி - 3 சேவைத் தரத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகள் மற்றும் அவற்றில் தற்போது நடைமுறையில் உள்ளதும், எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களும் ஆகியவற்றிற்குட்பட்டு தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மேற்கண்ட பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

1.2 இப்பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதியம் உரித்து உடையவை. மேலும் நியமிக்கப்படுப வர்கள் விதவை மற்றும் அநாதை ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர் மற்றும் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிக்க வேண்டும். அரசாங் கத்தால் காலம்தோறும் நிர்ணயிக்கப்படும் விதிமுறைகளின்படி அதற்கான கட்டணங்களை செலுத்த வேண்டும்.

1.3 இப்பதவிகள் தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்திற்கு மட்டும் வரையறுக்கப் பட்டவை.

1.4 இந்நியமனங்கள் மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவை. பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று ஆண்டு களுக்குள், முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப

சேவை வகுதி - 3 சேவைத் தரத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி முதல் வினைத் திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

1.5 நியமிக்கப்படுபவர்கள் 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி, நியமன திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் தேவை யான அரச கரும மொழித் திறனைப் பெற வேண்டும்.

1.6 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் ஏற்கத் தவறினால் அல்லது தவிர்த்தால், அந்த நியமனம் இரத்துச் செய்யப்படலாம்.

2.0 **பதவிகளுக்கான சம்பளக் குறியீடும் சம்பள அளவுத் திட்டமும்** :

2.1 சம்பளக் குறியீடு : MT 01- 2025

2.2 சம்பள அளவுத்திட்டம் : ரூ. 50,090.00 -10 x 540-11 x 630-10 x 1,010 - 10 x 1,190 - ரூபா 84,420.00 என்ற சம்பள அளவு இப்பதவிக்கு வழங்கப்படும்.

2025.03.25 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி சம்பந்தப் பட்ட பதவிக்கு நியமனம் செய்யும் போது வழங்கப்படும் சம்பளம் தீர்மானிக்கப்படும்.

3.0. **பதவிகளுக்குச் சேர்க்கப்படும் கடமைகள் :**

*முன் அச்சு திட்டமிடலாளர் (Pre Press Planner)* :

- பக்க வடிவமைப்பு (Layout) செய்தல்
- செயல்முறை கேமரா (Process camera) வேலைகள்
- புகைப்படப் படலங்களைப் பயன்படுத்தி வடிவமைத்தல் மற்றும் பக்க அமைப்பு செய்தல்
- ரிப் (RIP) செய்தல்
- பட உருவாக்கம் (Image setting) செய்தல்
- பிளேட் தயாரித்தல் (Plate making)
- பாலிமர் பிளேட் தயாரித்தல் (Polymer Plate making)
- டிஜிட்டல் அச்சு இயந்திரங்களை இயக்குதல்

*அச்சு தொழில்நுட்பவியலாளர் (Printing technician)* :

- தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக் களத்தின் அச்சுப் பிரிவில் உள்ள அனைத்து அச்சு இயந்திரங்களின் கோளாறுகளை கண்டறிந்து சிறிய பழுதுபார்ப்பு பணிகளை மேற்கொள்ளுதல் .

*அச்சு சீராக்குனர் (Post Press Printer)* :

- மடித்தல் தொகுத்தல் (gathering), இணைத்தல் (inserting), வயர் கட்டுதல், பகுதி தைத்து இணைத்தல் (section sewing), பேர்பக்ட் பைண டிங் (perfect binding) வெட்டுதல் கவர் தயாரித் தல், லெட்ஜர் தயாரித்தல், மீளக்கட்டுதல், பொதி செய்தல்.

4.0. **ஆட்சேர்ப்பு தகைமைகள் :**

4.1 **கல்வித் தகைமைகள்:**

சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமை சித்தி பெற்றிருக்கும் வகையில், ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்;

அல்லது

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) நிலை 3 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

4.2 **தொழில்துறை தகைமைகள் :**

*முன் அச்சு திட்டமிடலாளர் (Pre Press Planner) :*

அங்கீகரிக்கப்பட் நிறுவனம் ஒன்றில் முன் அச்சு தொழில்நுட்பம் தொடர்பாக குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் முழுநேரப் பயிற்சி பாடநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் அல்லது அதே துறையில் நான்கு (04) ஆண்டுகள் தொழில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

*அச்சு தொழில்நுட்பவியலாளர் (Printing Tech nician)* :

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் அச்சுத் தொழில்நுட்ப துறையுடன் தொடர்புடைய பொருத்தல் தொழில்/ மின்தொழில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் முழுநேரப் பயிற்சி பாடநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் அல்லது NVQ நிலை 4 தகுதி பெற்றிருக்க வேண்டும்.

*அச்சு சீராக்குனர் (Post Press Printer) :*

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் அச்சு நிறைவு துறையுடன் தொடர்புடைய குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் முழுநேரப் பயிற்சி பாடநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் அல்லது NVQ நிலை 4 தகுதி பெற்றிருக்க வேண்டும்.

4.3 உடற் தகுதி :

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவை செய்யவும், பதவியின்

கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் மனத் தகுதி கொண்டவராக இருக்க வேண்டும்.

4.4 பிற தகுதிகள் :

1. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை மற்றும் நல்ல பண்புகளைக் கொண்டவராக இருக்க வேண்டும்.
3. இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய தேவையான அனைத்து தகுதிகளும் விண்ணப்பங்கள் 3 கோரப்படும் இறுதி திகதிக்குள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பு : இப்பதவிக்கு தேவையான அனுபவமும் தகுதிகளும் ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்களால் நிரூபிக்கப்பட வேண்டும். அந்த தகுதிகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்குள் செல்லுபடியாக இருக்க வேண்டும்.

4.5 வயது : 18 வயதுக்கு குறையாமல் 35 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

## 5.0 ஆட்சேர்ப்பு முறை :

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கும் நேர்முகப் பரீட்சை குழுவினால் நடாத்தப்படும் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை முடிவின் அடிப்படையில், விண்ணப்பதாரர்கள் தகுதி வரிசைப்படி ஒவ்வொரு பதவிக்கும் நியமிக்கப்படுவர்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான விரிவான மதிப்பீட்டு அளவுகோல்கள் கீழே இணைக்கப்பட்ட அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

## 6.0. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :

**குறிப்பு** : இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும்போது, சம்பந்தப்பட்ட பதவிக்கான தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

(I) விண்ணப்பங்கள் 2026.07.03 ஆந் திகதிக்குள் அல்லது அதற்கு முன்

"பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,
இல. 306/71, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை"
என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.
அந்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(II) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி படிவம் இந்த அறிவிப்பின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவிலான காகிதத்தில் தயாரிக்க வேண்டும்.

குறிப்பிட்ட மாதிரி படிவத்திற்கு ஏற்ப இல்லாத அல்லது முழுமையற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும். எனவே விண்ணப்பத்தை அனுப்புவதற்கு முன் அது சரியான படிவத்தில் உள்ளதா மற்றும் அனைத்து தகவல்களும் முழுமையாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரர் உறுதி செய்ய வேண்டும்.

(III) விண்ணப்பம் அனுப்பப்படும் உறையின் மேல் இடது மூலையில் "முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதி 3 தரம் III பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு" என்று குறிப்பிட வேண்டும். பல பதவிகளுக்கு விண்ணப்பிக்குமிடத்து தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

(IV) விண்ணப்பதாரரின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட வேண்டும். ஏதேனும் ஒரு நிறுவனத்தின் மூலம் விண்ணப்பிக்கும் ஒருவர் தமது கையொப்பத்தை அந்த நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சான்றுப்படுத்த வேண்டும். அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரிகள், கிராம உத்தியோகத்தர் அல்லது சமாதான நீதவானால் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

(V) வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் தொலைந்துபோதல் அல்லது தாமதம் குறித்த எந்தவித முறைபாடும் ஏற்கப்பட மாட்டாது.

## 7.0 தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :

(I) வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் உள்ளவர்களே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கணிப்பின் அடிப்படையில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட வயது வரம்பிற்குள் உள்ளவர்களாகவும், விண்ணப்பங்கள் பெறப்படும் இறுதி திகதிக்குள் அல்லது அதற்கு முன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பங்கேற்பதற்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்படும்.

(II) தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பங்கேற்க அழைப்புக் கடிதம் வழங்கப்படுவது, விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படலாகாது.

(III) விண்ணப்பதாரர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்ட உடன் அதனை அறிவிக்கும் அறிவிப்பு https://www.statistics.gov.lk/ என்ற இணையதளத்தில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப் படும். அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்தும் அழைப்புக் கடிதம் கிடைக்காத விண்ணப்பதாரர்கள் இருப்பின், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டபடி திணைக்களத்தின் தாபனப் பிரிவுடன் தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வாறு தொடர்பு கொள்ளும்போது, விண்ணப்பதாரர் விண்ணப்பித்த பதவியின் பெயர், முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவை சரியாக குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பிற்கு வெளியே வசிப்பவராக இருந்தால், மேற்குறித்த விபரங்களுடன், அழைப்புக் கடிதத்தின் பிரதியை விரைவாகப் பெறுவதற்காக தமது தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரியையும் குறிப்பிட்டு, அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்து மூலம் கோரிக்கை அனுப்புவது சிறந்தது. மேலும், இவ்வாறு வினவும்போது திணைக்களம் கேட்கக்கூடிய தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக, தாம் வைத்துள்ள விண்ணப்பத்தின் பிரதியும், பதிவுத் தபால் பற்றுச்சீட்டும் தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(IV) தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்து வதற்கான விதிமுறைகளை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிர்ணயிப்பார். அந்த விதிமுறைகளுக்கு தகுதி மதிப்பிட்டு நேர்முகப் பரீட்சையில் பங்கேற்கும் விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும். அவ்விதிமுறைகளை மீறும் பட்சத்தில், பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்பட வேண்டியிருக்கும்.

8.0 விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :

தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, விண்ணப்ப தாரர்கள் கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றை நேர்முகப் பரீட்சை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும் :

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், நேர்முகப் பரீட்சையில் பங்கேற்கும் விண் ணப்பதாரர்கள் தங்கள் அடையாளம் தெளிவாக உறு திப்படுத்தப்படும்படி முகமும் இரு காதுகளும் மறைக் கப்படாதவாறு சமூகமளிக்க வேண்டும் தங்கள் ஆளடை யாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்ப தாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் அத்துடன் நேர்முகப் பரீட்சை முடியும் வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விண்ணப்பதாரரை அடையாளங் காணக்கூடிய வகையில் முகமும் காதுகளும் மறைக்கப்படாமல் இருக்க வேண்டும்.

9.0 **தவறான தகவல் வழங்கல் :**

நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பிற்கு முன் கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப் பட்டால், சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் கீழ் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

10.0 மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களில் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கையை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தீர்மானிப்பார்.

11.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவிப்பு இம்மூன்று மொழி களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்பட்டால், சிங்கள மொழி அறிவிப்பே மேலோங்குதல் வேண்டும்.

கே. எம். டி. எஸ். டி. கருணாரத்ன,
பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,
2026, மே 22.

**அட்டவணை**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதி -3 தரம் III முன் அச்சு வடிவமைப்பாளர், அச்சு தொழில்நுட்பவியலாளர் மற்றும் அச்சு தயாரிப்பாளர் பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பு**

தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை- புள்ளிகள் வழங்கும் முறை

| | *வழங்கப்படும் முக்கிய தலைப்புகள்* | | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 10 |
| | க. பொ. த. (உயர்தரம்) தேர்ச்சி பெற்றிருந்தால் | புள்ளிகள் 05 | |
| | க. பொ. த. (உயர் தரம்) கணிதம்/ பௌதீகவியல்/ இரசாயனவியல்/ பொறியியல்/ தகவல் மற்றும் தொடர்பாடல்/ சிவில்/ இயந்திர/ மின்சார/ இலத்திரனியல் தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ தொழில்நுட்ப விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தி | புள்ளிகள் 03 | |
| | க. பொ. த. (சாதாரண தரம்) விஞ்ஞானம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம்/ இயந்திர/ மின்சார/ இலத்திரனியல் தொழில்நுட்பத்தில் விசேட சித்தி | புள்ளிகள் 03 | |
| | க. பொ. த. (சாதாரண தரம்) விஞ்ஞானம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம்/ இயந்திர/ மின்சார/ இலத்திரனியல் தொழில்நுட்பத்தில் விசேட சித்தி | புள்ளிகள் 02 | |
| | க. பொ. த. (சாதாரண தரம்) விஞ்ஞானம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம்/ இயந்திர/ மின்சார/ இலத்திரனியல் தொழில்நுட்பத்தில் சாதாரண சித்தி<br>க. பொ. த. (சாதாரண தரம்) கணிதம் விசேட சித்தி | புள்ளிகள் 03 | |
| 2. | **மேலதிக தொழிற்துறை தகைமைகள் :** | | 25 |
| | முன்அச்சு திட்டமிடலாளர் | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் முன் அச்சுத் துறையில் பயிற்சி | | |
| | • 1 வருடத்திற்கு குறையாத பாடநெறி<br>• 06 மாதங்களுக்கு குறையாத பாடநெறி | புள்ளிகள் 05<br>புள்ளிகள் 03 | |
| | அச்சு தொழில்நுட்பவியலாளர் | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய பயிற்சி | | |
| | • 1 வருடத்திற்கு குறையாத பாடநெறி<br>• 06 மாதங்களுக்கு குறையாத பாடநெறி | புள்ளிகள் 05<br>புள்ளிகள் 03 | |
| | அச்சு சீராக்குனர் | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய பயிற்சி | | |
| | • 1 வருடத்திற்கு குறையாத பாடநெறி<br>• 06 மாதங்களுக்கு குறையாத பாடநெறி | புள்ளிகள் 05<br>புள்ளிகள் 03 | |
| 3. | **மேலதிக அனுபவம் :** | | |
| | (அனுபவம் தொடர்பில் ஒவ்வொரு முழு ஆண்டிற்கும் 12 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 5 ஆண்டுகள் வரை வழங்கப்படும்.) | | 60 |
| | முன்அச்சு திட்டமிடலாளர் (Pre - Press Planner)<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் அனுபவம் | | |
| | அச்சு தொழில்நுட்பவியலாளர் (Printing Technician)<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் அனுபவம் | | |
| | அச்சு சீராக்குனர் (Post Press Printer)<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் அனுபவம் | | |
| 4. | நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்திய திறன் | | 05 |
| 5. | மொத்தம் | | 100 |

கே. எம். டி. எஸ். டி. கருணாரத்ன,
பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்)

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதி - 3 தரம் III முன் அச்சு திட்டமிடலாளர், அச்சு தொழில்நுட்பவியலாளர் மற்றும் அச்சு தயாரிப்பாளர் பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பம் கோரல்**

நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழிமூலம்
(சிங்களம்-2/தமிழ்-3) ☐

(குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

விண்ணப்பிக்கும் பதவி ..................................................

01. 1.1 முழுப்பெயர்: ..........................................................................................................................................
..........................................................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம்: SUNIL, A.B.

1.3 முழுப் பெயர்: ..........................................................................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்) ..........................................................................................................................

02. நிரந்தர முகவரி :-

2.1 (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :...................................................................................................

2.2 (சிங்களத்தில்/தமிழில்) :..........................................................................................................................

2.3 தொலைபேசி இலக்கம் :

கையடக்கத்தொலைபேசி இல. : | | | | | | | | | | |

வதிவிட தொலைபேசி இல. : | | | | | | | | | | |

03. 3.1 பால் : ☐
பெண் - 1
ஆண் - 0 (குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

05. பிறந்த திகதி:

வருடம் : | | | | | மாதம் : | | | திகதி : | | |

06. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது (2026.07.03)

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

07. சிவில் அந்தஸ்து (திருமணமானவர்/ திருமணமாகாதவர்) :

08. இலங்கைப் பிரசையா : ........................................................................................................................

09. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா.த.)
சுட்டெண் : ............................................. பரீட்சைக்கு தோற்றிய வருடம் :..........................................

1. ..................................................................................... 6. .....................................................................................
2. ..................................................................................... 7. .....................................................................................
3. ..................................................................................... 8. .....................................................................................
4. ..................................................................................... 9. .....................................................................................
5. ..................................................................................... 10. .....................................................................................

க. பொ. த. (உ.த.)
சுட்டெண் : ............................................. பரீட்சைக்கு தோற்றிய வருடம் :..........................................

1. ..................................................................................... 3. .....................................................................................
2. ..................................................................................... 4. .....................................................................................

10. தொழிற் தகைமைகள் :

| *பாடநெறியின் பெயர்* | *நிறுவனம்* | *NVQ மட்டம்* | *காலப்பகுதி* | *செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

11. அனுபவம் :

| *நிறுவனம்* | *சேவைக்காலம்* |
|---|---|
| | |
| | |

12. வேறு தகைமைகள் :

..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

13. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டிற்காக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டுள்ளீர்களா? அவ்வாறெனில், அதற்கான விவரங்களை குறிப்பிடவும்.
..........................................................................................................................................................................

14. **விண்ணப்பதாரரின் உறுதியுரை** :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்பதனை இதன் மூலம் உறுதியுரைகிறேன். மேலும், இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நான் இப்பதவிக்கு தகுதியற்றவராவேன் என்பதையும், பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கு அறிந்திருக்கிறேன் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

.............................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :................................

15. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்** :

மேற்படி பெயரையுடைய திரு./ திருமதி/ செல்வி ......................................................................................... என்பவரை நான் நன்கு அறிவேன் என்றும், இன்றைய தினம் என் முன்னிலையில் அவர் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

.............................................,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்
(கிராம உத்தியோகத்தர்/சமாதான நீதவான்)

பெயர் :..........................................................................................
பதவிப் பெயர் :.............................................................................
முகவரி :.......................................................................................
திகதி :..........................................................................................

16. தற்போது அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் மட்டும் தங்களது திணைக்களத் தலைவரின் கீழ்க்காணும் சான்றிதழுடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்படி பெயரையுடைய திரு./ திருமதி/ செல்வி ................................................................................................ இந்த நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார் என்பதையும், அவர் வழங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்பதையும், இப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்நிறுவன சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் இதன் மூலம் சான்றுப்படுத்துகிறேன்.

.............................................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :..........................................................................................
பதவிப் பெயர் :.............................................................................
முகவரி :.......................................................................................
திகதி :..........................................................................................
(உத்தியோகபூர்வ முத்திரை)

06 - 127

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாக, மேலதிக விவாக பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல் - அறிவித்தல் இரத்துச் செய்தல் - கண்டி மாவட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2423 ஆம் இலக்க மற்றும் 2025.02.07 ஆம் திகதிய வர்த்தமானியில் என்னால் வெளியிடப்பட்ட கண்டி மாவட்டத்திற்கான பிறப்பு, இறப்பு மற்றும் விவாக, மேலதிக விவாக பதிவாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்களை கோரும் அறிவித்தல்களை மாத்திரம் இத்தால் இரத்துச் செய்கிறேன்.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* |
|---|---|---|
| கண்டி | உடபலாத்தை | கந்துகர இஹல நெகெனஹிர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடபலாத்த பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி |
| கண்டி | யட்டிநுவர | உடுநுவர-யட்டிநுவர பிரிவின் மேலதிக விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி |

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, மே 26.

06-145

---

## சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

### மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர்களின் சேவையின் மருந்தாளர் பதவிக்கான வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்காக பட்டதாரிகள் ஆட்சேர்த்தல் - 2026

1. அப/26/0380/802/002 - I மற்றும் 2026.03.03 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைவாக, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில் வல்லுநர்களின் சேவையின் மருந்தாளர் பதவியிலுள்ள 164 வெற்றிடங்களுக்குரிய வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது வேறு பட்டமளிக்கும் நிறுவனத்தினால் வழங்கப்படும் பட்டத்தைப் பெற்றுள்ள, கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பதவிக்குரிய கல்வி மற்றும் ஏனைய விசேட தகைமைகள் :-**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் (Credit pass) இணைந்த கணிதம், உயிரியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதேனும் இரண்டு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்;

(ஆ) குறைந்தபட்சம் 120 கல்விப் பெறுமானத்தைக் (Academic value/Credits) கொண்ட மருந்தாளர் (B.Pharm)/ விஞ்ஞானமாணி (மருந்தாளர்) (B.Sc. Pharmacy) பட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல்;

(இ) இலங்கை மருத்துவ சபையில் (Sri Lanka Medical Council) பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

3. **ஏனைய பொதுவான தகைமைகள்** :-

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்யக் கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடதையுடைய வர்களாக இருத்தல் வேண்டும்.

(உ) 2026.07.08 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஊ) சம்பந்தப்பட்ட பட்டம் வலுப்பெறும் திகதி (Effective Date) விண்ணப்பங்கள் பொறுப் பேற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னரான ஒரு திகதியாக இருத்தல் வேண்டும்.

(எ) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படும் திகதியன்று அனைத்துத் தகைமைகளையும் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன், விண்ணப்பதாரிகள் தகைமைகளை உறுதிப் படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

4. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :-**

(அ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண் ணப்பப்படிவத்தின் வடிவத்திற்கமைவாக தனது விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டுமென்ப துடன், அதற்காக A4 அளவிலான கடதாசியைப் பயன்படுத்த வேண்டும். (இலக்கம் 1 தொடக்கம் 8 வரை முதலாவது பக்கத்திலும், 09 தொடக்கம் 13 வரை இரண்டாவது பக்கத்திலும், 14 தொடக்கம் 15 வரை மூன்றாவது பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.)

(ஆ) விண்ணப்பப்படிவத்தின் "பற்றுச்சீட்டு" receipt) எனும் இடத்தில், இலங்கை வங்கியின் தப்ரோ பேன் (Taprobane) கிளையின் 7041318 இலக்கத்தைக் கொண்ட "சுகாதாரச் செயலாளர், பரீட்சைக் கட்டணச் சேகரிப்பு" என்ற கணக் கிற்கு ரூ. 1,000.00 இனை வைப்பிலிட்டு, அப்பற்றுச்சீட்டினைக் கழன்று போகாதவாறு ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுவதற்கு முன்னர் அதன் பிரதியொன்றை வைத்துக் கொள்ளவும்.)

(இ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் அல்லது சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு அல்லது முப்படையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 854,880.00 இற்கு மேற்பட்ட வருடாந்தத் திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவிநிலைத் தரத்திலுள்ள பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(ஈ) உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங் களை 9" x 4" அளவிலான கடித உறையிலிட்டு, அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர்களின் சேவையின் மருந்தாளர் பதவியின் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்காக பட்டதாரிகள் ஆட்சேர்த்தல் - 2026" எனவும், சம்பந்தப்பட்ட பட்டம் மற்றும் கல்வியாண்டும் குறிப்பிடப்பட்டு, 2026.07.08 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இல. 106 டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் அனுப்பி வைத்தல் வேண்டும்.

5. அரசாங்க அல்லது அரை அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப் படமாட்டாது என்பதுடன், குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கும் சம்பந்தப்பட்ட மாதிரிப் படிவத்திற்கும் அமையாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

7. பயிற்சி நெறிக்குச் சம்பந்தமாக மேலே குறிப்பிட்டுள்ள பட்டதாரிகளின் பட்டம் வலுப்பெறும் திகதி (Effective Date) மற்றும் பட்டத்தின் தரத்தின் பொது மதிப்பீடு (GPA) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு

திறமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு பயிற்சி நெறிக்காகத் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இறுதியாகப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியாகிய 2019.06.14 ஆந் திகதிக்குப் பின்னர் பட்டத்தைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

08. வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகளவான பட்டதாரிகள் விண்ணப்பித்திருப்பின், வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்குச் சேர்த்துக் கொள்வதற்காக பொது அறிவு மற்றும் உளச்சார்பு தொடர்பான 01 மணித்தியால வினாத்தாளொன்றைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சையொன்று நடாத் தப்பட்டு, அப்பரீட்சையில் காண்பிக்கும் திறமையின் அடிப்படையில் 164 பேர் பயிற்சிக்காக ஆட்சேர்க்கப் படுவார்கள்.

09. நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை மற்றும் அவற்றின் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதியொன்று வீதம் சமர்ப்பிக்க வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்.
II. பட்டச் சான்றிதழின் மூலப் பிரதி (இதன் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதியொன்று விண்ணப்பத்துடனும் இணைக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும்).
III. விரிவான பட்டச் சான்றிதழின் (Transcript) மூலப் பிரதி.
IV. க. பொ. த. (உ./த.) பரீட்சைப் பெறுபேறுகளைக் காட்டும் சான்றிழின் மூலப் பிரதி.
V. தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.
VI. மருத்துவ சபையின் பதிவை (SLMC) உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

10. **பயிற்றுவித்தல் நடைமுறை** :-

I. நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட விண்ணப்பதாரிகள் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறியை ஆங்கில மொழியில் கற்பதற்காக 06 மாத காலத்திற்கு வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு இணைக்கப்படுவர்.

II. பயிலுநர்கள் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால அவ்வப்போது விதிக்கப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் உட்பட்டவர் களாவர்.

III. பயிற்சி பெறும் காலப்பகுதியின் முடிவில் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யாத, வேலை மற்றும் நடத்தை திருப்திகரமாக அற்ற அல்லது தாங்கள் இணைக்கப்படும் நிறுவ னத்தில் நடைமுறையிலுள்ள நிபநதனைகளைக் கடைப் பிடிக்கத் தவறும் பயலுநர்களின் பயிற்சியை, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நட்ட ஈடு வழங்கு தலின்றி முடிவுக்குக் கொண்டு வரலாம்.

IV. பயிற்சி பெறும் காலப்பகுதியினுள் பயிலுநர் களுக்கு அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் ஏற்பாடுகளுக்கமைவாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

V. பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்வதாகவும், பயிற்சி நெறியைக் கைவிட்டுச் செல்வதில்லையெனவும், அப்பயிற் சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் சம்பந்தப்பட்ட பதவியில் நியமனம் பெற் றால் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலப் பகுதிக்குச் சம்பந்தப்பட்ட பதவியில் சேவை செய்வதாகவும், சுகாதாரச் செயலாளருடன் ஒப்பந்தமொன்றிற்கும் பிணை முறிக்கும் (Bond) உட்படுதல் வேண்டும்.

பயிற்சிக் காலப்பகுதியினுள் பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சிக்குப் பின்னர் நியமனத்தைப் பொறுப்பேற்காவிடின், மேற்குறிப்பிட்ட III ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டவாறு பயிற்சியிலிருந்து நீக்கப்பட நேரிட்டால் அல்லது நியமனம் பெற்று ஐந்து (05) வருட காலப்பகுதிக்குச் சம்பந்தப்பட்ட பதவியில் சேவை செய்யத் தவறினால் ஆகிய எந்தவொரு காரணத்தின் போதும் பயிற்சிக் காலப்பகுதியினுள் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு, அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட செலவுகள், ஒப்பந்தம் மற்றும் பிணைமுறிக்குரிய பணம் ஆகியவற்றை அவர் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அப்பணத்தை அறவிடுவதற்காக ஒப்பந்தப் பிரகாரம் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக் கப்படும்.

11. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

பயிற்சியின் முடிவில் சம்பந்தப்பட்ட பதவியில் நிரந்தர நியமனங்களை வழங்குவதா/ இல்லையா என்பது தீரமானிக்கப்படுவது அந்தச் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களின் அளவின் அடிப்படையிலாகும். அதற்கமைவாக, சம்பந்தப்பட்ட பதவியில் நிரந்தர நியமனங்களை வழங்குவதற்குச் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தீர்மானித்தால், விண்ணப்பதாரிகள் தாங்கள் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கற்கைநெறிக்குரிய ஆட்சேர்ப்பு நடை முறையின் நிபந்தனைகள் மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பதவியின் தரம் III இற்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நிறைவுகாண் தொழில்வல்லுனர்களின் சேவையின் பதவிகளுக்காக அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இற்கமைவாக MT-6-2025 இன் படி ரூபா 54,120.00 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320- 10 x 1,350 - ரூபா 101,910.00 என்ற சம்பளத்திட்டம் உரித்தாவதுடன், கொடுப்பனவுகள் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் ஏற்பாடுகளுக் கமைவாக மேற்கொள்ளப்படும்.

12. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் தொடர்பான விபரங்களை விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்க வேண்டும். பயிற்சிக்காகச் சேர்த்துக் கௌ்ளப்பட்டதன் பின்னர் அல்லது நியமனம் பெற்றதன் பின்னர் மேற்குறிப்பிட்ட சான்றிதழ்கள் போலியானவை என நிரூபிக்கப்பட்டால், சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைப்ப தற்கும், வழங்கப்படும் நியமனத்தை இரத்துச் செய்து பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கி அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து மீண்டும் அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ளப்படாதவர்களின் கறுப்புப் பட்டியலில் (Blacklist) அவரது பெயரைச் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பயிற்சிக் காலப்பகுதியினுள் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு, அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட செலவுகள் உள்ளடங்கிய ஒப்பந்தம் மற்றும் பிணை முறிக்குரிய பணத்தை அவரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் சம்பந்தப் பட்ட கற்கைநெறியைக் கற்பதற்கும், நாட்டின் எந்த வொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பயிற்சியின் முதலாவது மாதத்தினுள் மருத்துவப் பரிசோதனையொன்றுக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன் மருத்துவப் பரிசோ தனையில் தகுதியற்றவர்கள் எனக் காணப்படும் விண் ணப்பதாரர்கள் கற்கைநெறியில் தொடர்ந்தும் தங்கி யிருக்கத் தகுதியற்றவர்களாவர்.

14. மேற்குறிப்பிட்டவாறு சேர்த்துக் கொள்ளப்படும் அனைவரும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஏற் புடையதாகும் அனைத்துச் சட்டதிட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் விதிக்கப்படும் கொள்கைகளுக்கும், நிதிப் பிரமாணங்கள் மற்றும் ஏனைய பிரமாணங்களுக்கும் அத்துடன் அரசாங்கத் தினால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்டத்திட்டங் களுக்கும் கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

15. பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்படும் விண்ணப்ப தாரர்களுக்கு வதிவிட வசதிகளை வழங்குவதற்கு இவ்வமைச்சு கடமைப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால், அதற்காக மதிப்பிடப்பட்ட வீட்டு அறை வாடகை, நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்கள் அறவிடப்படும்.

16. பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உள்வாங்கப்படும் அல்லது உள்வாங்கப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைக்குரிய நிலைமை தோன்றினால், அது தொடர்பாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும். இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பிரதிகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு தோன்றினால், அப்போது சிங்கள மொழிப் பிரதியே வலுவிலிருத்தல் வேண்டும்.

விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2026.06.03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## மருத்துவ துறைக்கான துணை தொழில்கள் சேவைகளில் மருந்தாளர் பதவிக்கான மற்றும் பணியிடம் மற்றும் ஒருங்கிணைப்பு பட்டதாரிகள் பணிக்கு பட்டதாரிகள் ஆட்சேர்த்தல் - 2026

(விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன் அரசாங்க சுற்றுநிரூபத்தை கவனமாகப் படிக்கவும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................
(ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) உதா. A.B.C.SILVA

(ஆ) முழுப் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) : .........................................................

(இ) முழுப் பெயர்(சிங்களம்/தமிழ்) : ....................................................................................

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ........................................................................ (நகலை இணைக்கவும்)

3. அஞ்சல் முகவரி : (சிங்களம்/ தமிழில்/ ஆங்கிலத்தில்) : ........................................................................

4. (அ) நிரந்தர முகவரி : (சிங்களம்/ தமிழில்/ ஆங்கிலத்தில்) : ........................................................................
..................................................................................................................................................................
..................................................................................................................................................................
..................................................................................................................................................................

(ஆ) தொலைபேசி இல. : கைத்தொலைபேசி | | | | | | | | | | |

தொலைபேசி | | | | | | | | | | |

(இ) வசிக்கும் மாவட்டம் : சிங்களம்/ தமிழில் ........................................... ஆங்கிலத்தில் ..............................................

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தின் நிரந்தர குடியிருப்பாளரா? ஆம்/ இல்லை : ....................................................................

(உ) ஆம் எனில், எவ்வளவு காலமாக? : ..................................................................................................................

5. பிறந்த திகதி : ஆண்டு :........................... மாதம் : .......................................... திகதி : .................................................

2026.07.08 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் :........................ மாதங்கள் : ......................... நாட்கள் :...................

6. பாலினம் : ஆண் ☐ பெண் ☐ (பொருத்தமான பெட்டியில் ✓ குறியிடவும்)

7. நீங்கள் இலங்கையின் குடிமகனா : ஆம் ☐ இல்லை ☐ (பொருத்தமான பெட்டியில் ✓ குறியிடவும்)

8. திருமண நிலை : திருமணமானவரா? ☐ திருமணமாகாதவரா ☐ (பொருத்தமான பெட்டியில் ✓ குறியிடவும்)

9. கல்வித் தகைமைகள் :

| *தொடர் இல.* | *தேர்ச்சி பெற்ற பட்டம்* | *தரப்புள்ளி* | *சராசரி (GPA) மற்றும் பட்டம் பெற்ற திகதி* | *பல்கலைக்கழகம்* | *கல்வி ஆண்டு* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

10. இலங்கை மருத்துவ மன்ற (SLMC) பதிவு எண் மற்றும் திகதி :....................................................

11. எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டால் நீங்கள் எந்த மொழி வழியில் தோன்ற விரும்புகிறீர்கள்? : ................................

12. எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா? ஆம் ☐ இல்லை ☐

(பொருத்தமான பெட்டியில் ✓ குறியிடவும்)

“ஆம்” எனில், விவரங்களை வழங்கவும்: ..........................................................................................

13. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) நான் அரசாங்க சுற்றுநிருப அறிவிப்பைப் படித்துப் புரிந்துகொண்டேன் என்றும், அதில் கூறப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்பட்டு இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்துள்ளேன் என்றும், இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்றும் உறுதியாக அறிவிக்கிறேன்.

(ஆ) என்னால் கூறப்பட்ட ஏதேனும் கூற்றுக்களோ அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்களோ பொய்யானவை எனக் கண்டறியப்பட்டால், நான் பணியிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் புரிந்துகொள்கிறேன்.

| |
|---|
| தயவுசெய்து உரிய தொகையை, இலங்கை வங்கி, தப்ரபேன் கிளையில் உள்ள சுகாதாரச் செயலாளர் தேர்வுக் கட்டண வசூல் கணக்கு இல. 7041318 இல் செலுத்தி, ரசீதின் நகல் கீழே விழுந்துவிடாமல் இருக்க இந்த இடத்தில் இணைக்கவும். |

……............................... .................................................,
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்கான சான்றிதழ் :

இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் திரு./ திருமதி/ செல்வி ............................. எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் .............................. திகதியில் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் இதன்மூலம் சான்றளிக்கிறேன்.

……............................... .................................................,
திகதி சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்

சான்றுப்படுத்துபவரின் உத்தியோகபூர்வ முத்திரை

முழுப் பெயர் : .........................................................................................................................

பதவி: .................................................................................................................................................

முகவரி: ..................................................................................... .................................................................

15. விண்ணப்பதாரர் ஒரு அரசாங்க ஊழியர்/ மாகாண அரசாங்க ஊழியராக இருந்தால், திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (பொருந்தாத சொற்களை நீக்கிவிடவும்.)

(i) மேற்கண்ட விண்ணப்பதாரர் திரு./திருமதி/செல்வி ......................................................................................... இந்தத் துறையில் ............................................................................ பதவியை வகிக்கிறார் என்று இதன்மூலம் சான்றளிக்கிறேன்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும், அவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படலாம் அல்லது விடுவிக்கப்படாமலும் இருக்கலாம் என்றும் சான்றளிக்கிறேன்.

(iii) மேலும், இந்த ஆட்சேர்ப்பு ஒரு வெளி ஆட்சேர்ப்பு என்பதையும், அவர் சம்பந்தப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாக முடித்தாலும் முடிக்காவிட்டாலும் எந்த வகையிலும் தற்போதைய பதவிக்குத் திரும்ப முடியாது என்பதையும் நான் அவருக்குப் தெரிவித்துக் கொள்கிறேன்.

……............................... .................................................,
திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்

திணைக்களத் தலைவரின் பெயர் : .........................................................................................
பதவி :.........................................................................................................................................
முகவரி : .....................................................................................................................................

திணைக்களத் தலைவரின் உத்தியோகபூர்வ முத்திரை.

06 - 150

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

### கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

கம்பனி பரிசோதகர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் – 2026

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் நிலவும் கம்பனி பரிசோதகர் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளமான www.doenets.lk இல் “எங்கள் சேவைகள்” என்பதன் கீழுள்ள “ஆன்லைன் விண்ணப்பங்கள் (ஆட்சேர்ப்பு/E.B. தேர்வுகள்)” எனும் பிரிவினூடாக நிகழ்நிலையில் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் 2026.06.15 ஆம் திகதி மு.ப. 09.00 மணியிலிருந்து 2026.07.13 ஆம் திகதி பி.ப. 09.00 மணி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும். காலதாமதாக விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளுக்கு விண்ணப்பதாரி மட்டுமே பொறுப்பாவார்.

தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண பொதுச்சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது தனிப்பட்ட கோப்பில் இடுவதற்காக தமது விண்ணப்பத்தின் பிரதியொன்றை தங்களது திணைக்களத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது திணைக்களத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றினை சேவை உறுதிப்படுத்தல் கடிதத்துடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

1. இவ்வறிவித்தலில் “திணைக்களத் தலைவர்” எனும் பதமானது கம்பனிகள் பதிவாளர் நாயகம் என்பதாக பொருள் கொள்ளப்படும். இப்பரீட்சை மூலமான ஆட்சேர்ப்பானது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள கம்பனி பரிசோதகர் தரம் III பதவிக்கானதாகும். வேறுவகையில் விசேடமாக குறிப்பிடப்படாத வரையில் ”பதவி” என்பது கம்பனி பரிசோதகர் தரம் III என்பதையே குறிக்கும்.

2. **விண்ணப்ப முடிவுத் திகதி** : 2026.07.13 ஆகும்.

   2.1. **எழுத்துப் பரீட்சை** : இப்பரீட்சை பின்வரும் இரண்டு (02) வினாத்தாள்களை கொண்டிருக்கும்.

   I. மொழித்திறன்
   II. உளச்சார்பு பரீட்சை

   2.2. **பரீட்சை நடைபெறும் திகதி** - இப்பரீட்சையானது 2026 செத்தெம்பர் மாதத்தில் கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சையினை பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமை கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு உள்ளது.

   2.3. **நேர்முகப் பரீட்சை** - புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. தகைமைகள் மாத்திரம் பரிசோதிக்கப்படும்.

3. வழங்கப்படும் நியமனங்களின் எண்ணிக்கை ஆறு (06) ஆக காணப்படும். யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மிகுதியாகவுள்ள வெற்றிடத்திற்காக அல்லது பல வெற்றிடங்களுக்காக, காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களை விட அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்றால், நிரப்பப்பட வேண்டிய அத்தகைய பதவிவெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

   4.1. தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள், அரசாங்க சேவை நியமனங்களை ஒழுங்குபடுத்தும் பொதுவான நிபந்தனைகள், தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள், மற்றும் 2022.12.14 ஆம்திகதிய 2310/29 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு அமைவாகவும், 2018.07.31 ஆம் திகதி அரசாங்க சேவைகள் ஆணைகுழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகள் பதிவாளர் திணைக் களத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்கு விதிகள், இதன்பின்னர் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்கள் அடங்கலாக, என்பவற்றிற்கு அமைவாகவும், சேவையின் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

   4.2. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். இருப்பினும், உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை முடிவுகளுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

   4.3. கம்பனி பரிசோதகர் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு மூன்று (03) வருட கால தகைமை காண் காலத்தினைக் கொண்டுள்ளது. நியமனம்

பெற்ற ஒருவர், ஆட்சேர்ப்பு நடபடிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 03 ஆண்டுகளுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் கட்டாயமாக சித்தியடைதல் வேண்டும்.

4.4. பொது நிருவாகச் சுற்றறிக்கை இல.1/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின்படி, இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டு ஐந்து (05) ஆண்டுகளுக்குள், அரச கரும மொழியில் குறித்துரைக்கப்பட்ட மொழித்திறனை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** : 2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை I இன் படி, இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது ரூபா 53,060.00 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 5 x 1,350 – ரூபா 94,100.00 (MN-4/2025) ஆகும்.

மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக, காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுவதற்கிணங்க ஏனைய கொடுப்பனவுகளுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள் உரித்துடையவர்களாவர்.

6. **தேவையான தகைமைகள்** :

6.1. I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. சிறந்த நற்பண்புகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

6.2. ***கல்வித் தகைமைகள்*** :

I. பரீட்சார்த்தி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றை பெற்றிருத்தல் அவசியமாகும்.

6.3. ***தேகாரோக்கியம்***:
இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4. ***வயது எல்லை*** :
விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

அதற்கிணங்க விண்ணப்பதாரரின் பிறந்த திகதியானது 2005.07.13 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1991.07.13 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் அமைந்திருத்தல் வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும்போது, நிகழ்நிலை முறைமையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் பணம் செலுத்தும் முறையினை மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டும்.

i. ஏதேனுமொரு வங்கியின் கடனட்டை
ii. இணையவழி பணப்பரிமாற்றல் வசதியினைக் கொண்ட ஏதேனுமொரு வங்கியின் பற்று அட்டை
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கிச் சேவை முறைமை
iv. இலங்கை வங்கியின் ஏதேனுமொரு கிளை

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிட்ட முறைமைகளை பயன்படுத்தி பணம் செலுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சையுடன் தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழே உள்ளன.

(ஆ) உங்களது கொடுப்பனவு கிடைக்கப்பெற்றவுடன், குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் ஊடாக உங்களுக்கு அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுமையான தொகை கட்டாயமாக செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், கட்டணம் செலுத்தப்படாத அல்லது கூடுதலான தொகை செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட முறைமைகளினூடாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் ஏற்படக்கூடிய ஏதேனும் தவறுகளுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பாகமாட்டாது.

(இ) எந்தவொரு சூழ்நிலையிலும் பரீட்சைக் கட்டணமானது திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1. நிகழ்நிலை பரீட்சை விண்ணப்பப்படிவங்களை ஆங்கிலத்தில் மாத்திரம் பூரணப்படுத்த வேண்டும். நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மென்பிரதியின் ஏற்பு அல்லது நிராகரிப்பு தொடர்பில் விண்ணப்பிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது குறுஞ்செய்தி ஊடாக கையடக்க

தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்களை தர விறக்கம் செய்து, விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும்போது அறுவுறுத்தல்களை கவனமாக பின்பற்ற வேண்டும். அச்சிடப்பட்ட பிரதியினை பெற்றுக்கொண்ட பின்னர் விண்ணப்பப் படிவத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்கள் செல்லுபடியானதாக கருதப்படமாட்டாது. முழுமை யற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

8.2. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டோர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற அனுமானத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அதற்கு முன் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை முன்னிலைப் படுத்திய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது குறித்த அறிவித்தல் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும்/ விண்ணப்ப தாரரின் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி மூலம் அறிவிக்கப்படும். விண்ணப் பதாரியொருவர் தனது அனுமதி அட்டையினை பெற்றுக்கொள்ளாவிட்டால், அது தொடர்பாக அவர் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்ப தாரியின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினை சரியாக குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றினை விளம்பரத்தில் வழங்கப்பட்டிருக்கும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்தால் கோரப்படும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடமுள்ள விண்ணப்படிவத்தின் அச்சிடப் பட்ட பிரதியொன்றினை வைத்திருப்பது பிர யோசனமானது. அனுமதி அட்டையினை பரீட்சித்ததன் பின்னர், அவசியமான திருத்தங்கள் ஏதேனுமிருப்பின் பரீட்சைத் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும், அத்துடன் விண்ணப்பத்திற்கு ஏற்ப உரிய திருத்தங்களை அவசியம் மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து அல்லது நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படும் திருத்தங் களுக்கான கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப் படமாட்டாது.

9. **பரீட்சை மண்டபத்திற்கு அனுமதித்தல் :**

9.1. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையினை கொண்டிருக்கும் பரீட்சார்த்திகள் மாத்திரமே பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை தினத்தன்று அனுமதி அட்டையினை கையளிக்க தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

9.2. ஒரு பரீட்சார்த்தி தனக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது கையொப்பத்தினை முறையாக உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையினை பரீட்சை நிலையத்திற்கு தான் முதலாவதாக தோன்றும் தினத்தன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட் சார்த்தியும் பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பு இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு -** விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை கிடைத்திருப்பதென்பது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கு தேவையான தகைமைகளை பூர்த்திசெய்துள்ளதாக கொள்ளப்படமாட்டாது.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் மண்டப அதிகாரி திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழ்க்காணும் ஏதேனும் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடை யாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் காதுகளை மூடுவதை தவிர்த்து பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். மேலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்ப தாரர்கள் பரீட்சை மண்டபத்தில் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தில் உள்நுழைந்த பின்னர் பரீட்சை முடிந்து வெளியில் செல்லும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு

விண்ணப்பதாரரை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக முகம் மற்றும் காதுகளை மூடாமல் இருக்க வேண்டும்.

11. **பொய்யான தகவல் அளிப்பதற்கான தண்டனை:**

விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்யும்போது மிகக் கவனமாக இருப்பதுடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கிணங்க பரீட்சார்த்தி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்துக்குள் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்த்தை இரத்துச்செய்ய இடமுண்டு.

12. இதில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயமும் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

13. **பரீட்சையின் நடைபெறும் முறை :**

13.1 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

13.2 பரீட்சார்த்தியொருவர் பல்கலைக்கழக பட்டத்தினை பெற்றுக் கொண்ட மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் கட்டாயமாக பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

13.3 பரீட்சார்த்தியொருவர் தகைமைக்குரிய பட்டத்தினது பாடங்களை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருந்தால், அவர் பெரும்பான்மையான பாடங்களை எந்த மொழியில் சித்தியடைந்துள்ளாரோ அம்மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்கு தோற்றுதல் கட்டாயமாகும்.

13.4 பிரதான பாடத்தினை ஒரு மொழியிலும் ஏனைய பாடங்களை வேறு மொழியிலும் சித்தியடைந்துள்ள சிறப்பு பட்டத்தினை கொண்ட ஒரு பரீட்சார்த்தி, தான் பிரதான பாடத்தை சித்தியடைந்த மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்கு தோற்றுதல் கட்டாயமாகும்.

குறிப்பு:

I. மேலே 13.2 மற்றும் 13.3 ஆகிய வாசகங்களிலுள்ள தகைமைக்குரிய பட்டம் எனும் சொல்லானது 6.2 பந்தியின் (i) எனும் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழக பட்டத்தினை குறிக்கும்.

II. பரீட்சார்த்தி இரண்டு பரீட்சை தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

III. பரீட்சார்த்தி தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

14. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறைமை:**

14.1 ***எழுத்துப் பரீட்சை -***

இரண்டு (02) வினாத்தாள்களை கொண்டதான எழுத்துப் பரீட்சை பின்வரும் பாடங்களில் நடாத்தப்படும். பாடங்களும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு தேவையான குறைந்தபட்ச புள்ளிகளும் வருமாறு.

| *பாட இலக்கம்* | *பாடம்* | *புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான குறைந்தபட்ச புள்ளிகள்* | *காலம் (மணித்தியாலங்கள்)* |
|---|---|---|---|---|
| 01. | மொழித்திறன் | 100 | 40% | 02 |
| 02. | உளச்சார்பு பரீட்சை | 100 | 40% | 01 |

14.2 ***பொது நேர்முகப் பரீட்சை*** :

I. பொது நேர்முகப் பரீட்சையானது மேலே 6 ஆவது பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான தகைமைகளை பரீட்சார்த்தி பூர்த்தி செய்துள்ளாரா என்பதை தீர்மானிப்பதற்காக நடாத்தப்படும். நேர்முக பரீட்சை சபையானது திணைக்களத் தலைவரினால் தீர்மானிக்கப்படும்.

II. பரீட்சார்த்திகளுள் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் நாற்பது சதவீத (40%) புள்ளிகளை அல்லது அனைத்து பாடங்களிலும் அதிக மொத்த புள்ளிகளை பெறுபவர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவர்களாவர். தகுதியுடைய பரீட் சார்த்திகளில் எழுத்துப்பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் தகுதி வரிசையின் அடிப் படையில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுடைய பரீட்சார்த்திகள் போதுமானதாக இல்லாதிருந்தால், தகுதியுடைய பரீட்சார்த்திகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

குறிப்பு : நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிப்ப தானது நியமனத்திற்கான தகுதியாக கொள்ளப் படாது.

14.3 வெற்றிடங்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து, எழுத்துப் பரீட்சையில் மிகக்கூடிய புள்ளிகளை பெற்றுக் கொண்ட பரீட்சார்த்தியில் தொடங்கி தகுதி வரிசையின் அடிப்படையில் அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்த பரீட்சார்த்திகள் இப்பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

14.4 பெறுபேறுகள் :

இவ்வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 14.1 இற் கிணங்க, பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றுக் கொண்ட மொத்த புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேறு அறிக்கையானது கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடம் சமர்ப்பிக் கப்படும். நியமன அதிகாரியின் அனுமதியினை பெற்றுக்கொண்டதன் பின்னர் பெறுபேறுகள் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்தி களுக்கும் தனிப்பட்ட ரீதியில் அனுப்பிவைக்கப் படும், அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தினூடாக வெளியிடப்படும். பரீட் சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அனைத்து பரீட்சார்த்திகளும் இணங்கிச் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர். இவ்விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அபராதத்திற்கு உட்படுவர். "பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான பரீட்சைகள் ஆணையாளரின் தீர்மானமே இறுதியானதாகும்".

15. **எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம்:**

01. மொழித்திறன் - காலம் : 02 மணித்தியாலங்கள். (100 புள்ளிகள்)

இவ்வினாப்பத்திரமானது வெளிப்படுத்தல், கிரகித் தல், எழுத்துப்பிழை, மொழி மற்றும் உருவாக்கம், கொடுக்கப்பட்ட கட்டுரையொன்றினை வரைதல், வழங்கப்பட்ட தரவுகளிலிருந்து வரைபடங்கள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல், பந்திச் சுருக்கம், பல வாக்கியங்களின் கருத்துக்களை ஒரே வாக்கியத்தில் சுருக்குதல் மற்றும் அடிப்படை இலக்கணத்தின் பயன்பாடு என்பவற்றில் பரீட் சார்த்திகளுக்குள்ள ஆற்றல்களை பரீட்சிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பாடத்துடன் தொடர்பான கேள்விகளை உள்ளடக்கியதாக காணப்படும்.

02. உளச்சார்பு பரீட்சை - காலம் 01 மணித்தியாலம். (100 புள்ளிகள்)

இவ்வினாப் பத்திரமானது பரீட்சார்த்தியின் எண் சார்ந்த ஆற்றல், பகுத்தாராயும் ஆற்றல், பொது நுண்ணறிவு என்பவற்றை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட பாடத்துடன் தொடர்பான கேள்விகளை உள்ளடக்கியதாக காணப்படும்.

16. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது வேறுபாடு காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமே மேலோங்கி நிற்கும்.

கம்பனிகள் பதிவாளர் நாயகம்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல.400, "சமாகம் மெதுர",
டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
2026, யூன் 02.

06-96

## கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சு

## இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபை

இரண்டாவது அரையாண்டுக்காக (யூலை குழு) பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பித்தல் - 2026

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் (VTA) நாடு முழுவதிலும் அமைந்துள்ள தேசிய தொழிற் பயிற்சி நிறுவனங்கள், மாவட்டத் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் மாவட்ட மட்டத்தில் இயங்கும் ஏனைய தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைமுறைப்படுத்தும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளுக்காக 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டிற்காக (யூலை குழு) பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த தொழிற் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் NVQ (தேசிய தொழில் தகைமை) பாடநெறிகள் மற்றும் NVQ அல்லாத பாடநெறிகள் அவற்றின் குறியீட்டு எண்களின் கீழ் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளன. மேலும், NVQ நிலை மற்றும் பாடநெறியின் கால அளவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடநெறிகளின் விபரங்களை அறிந்துகொள்ளுதல் மற்றும் பாடநெறிகள் பொருட்டு விண்ணப்பம் செய்தல் :

1. பாடநெறிகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள துரித தொலைபேசி இலக்கம் / மாவட்டத் தொலைபேசி இலக்கம் ஊடாக மற்றும் WhatsApp தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்திகள் அனுப்புவதன் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

2. உங்கள் மாவட்டத்திற்கு அருகிலுள்ள தொழிற்பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் / தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம் அல்லது கிராமிய நிலையம் சென்று விண்ணப்பங்களை நேரடியாகச் சமர்ப்பிக்கலாம்.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையப் பக்கத்திற்குச் சென்று, இணையவழி (Online) முறை மூலமாகவும் பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பாடநெறி ஆரம்பம் - 2026 யூலை 01
மேலதிக விபரங்களுக்காக
தொலைபேசி இலக்கம்(துரித) - 011-7270270
011-7277888
- 070-6767696 (Whatsapp)
மின்அஞ்சல் முகவரி - cgjp@vtasl.gov.lk
இணைய முகவரி - www.vtasl.gov.lk
ஃபேஸ்புக் பக்கம் - www.facebook.com/VTA

தலைவர்,
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை,
4 ஆம் மாடி, நிபுணதா பியச,
அல்விட்டிகல மாவத்தை,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 05.

மாவட்ட நிலையங்கள் மற்றும் தேசிய பயிற்சி நிறுவனங்களின் தொலைபேசி இலக்கங்கள்

| **மாவட்ட நிலையங்கள்** | | |
|---|---|---|
| 1 | அம்பாறை (சிங்களம்) | 063 – 2223821 / 071 – 0318729 |
| 2 | அம்பாறை (தமிழ்) | 067 – 2251155 / 071 – 0318729 |
| 3 | அநுராதபுரம் | 025 – 2221400 / 071 – 4932730 |
| 4 | பதுளை | 057 – 2223043 / 071 – 0318731 |
| 5 | மட்டக்களப்பு | 065 – 2050753 / 071 – 0318732 |
| 6 | கொழும்பு | 011 – 2844151 / 071 – 5323232 |
| 7 | காலி | 091 – 2234540 / 071 – 1211729 |

| மாவட்ட நிலையங்கள் *(தொடர்ச்சி)* | | |
|---|---|---|
| 8 | கம்பஹா | 033 – 2294790 / 071 – 1361130 |
| 9 | ஹம்பாந்தோட்டை | 047 – 2241724 / 071 – 0318721 |
| 10 | யாழ்ப்பாணம் | 021 – 2227949 / 071 – 0318737 |
| 11 | களுத்துறை | 034 – 2263698 / 071 – 0318736 |
| 12 | கண்டி | 081- 2387200 / 071 – 9660269 |
| 13 | கேகாலை | 035 – 2282565 / 071 – 8011109 |
| 14 | கிளிநொச்சி | 021 – 2285686 / 071 – 3956503 |
| 15 | குருநாகல் | 037 – 2237436 / 077 – 4545459 |
| 16 | மாத்தளை | 066 – 2286683 / 071 – 0318749 |
| 17 | மாத்தறை | 041 – 2235950 / 071 – 0318753 |
| 18 | மொணராகலை | 055 – 2274775 / 071 – 1213423 |
| 19 | முல்லைத்தீவு | 021 – 2290097 / 075– 9875980 |
| 20 | நுவரெலியா | 052 – 2223216 / 071 – 1752322 |
| 21 | பொலன்னறுவை | 027 – 2245442 / 071 – 1212253 |
| 22 | புத்தளம் | 032 – 2254110 / 071 – 0318747 |
| 23 | இரத்தினபுரி | 045 – 2274699 / 071 – 2842556 |
| 24 | திருகோணமலை | 026 – 2234517 / 071 – 1211536 |
| 25 | வவுனியா | 024 – 2221617 / 075 – 5566733 |
| 26 | மன்னார் | 024 – 2221617 / 075 – 5566733 |
| **தேசிய தொழில் பயிற்சி நிறுவனங்கள்** | | |
| 1 | நாராஹேன்பிட்டிய | 011 – 2592233 / 071 – 1315005 |
| 2 | ரத்மலானை | 011 – 2638850 / 071 – 9476681 |
| 3 | பத்தேகம | 091 – 2293119 / 071 – 0318744 |
| 4 | நியாகம | 091 – 2296445 / 071 – 0796902 |
| 5 | மிரிஜ்ஜவில | 047 – 2220501 / 071 – 1212372 |
| 6 | தலல்ல | 041 – 2259331 / 071 – 3202751 |
| 7 | மட்டக்களப்பு | 065 – 2240159 / 071 – 0318729 |
| 8 | ஒருகொடவத்தை | 011 - 2072850 / 071 - 5145255 |

இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையிடமிருந்து கிடைக்கப்பெறும் நன்மைகள்

- திறன் அடிப்படையிலான பயிற்சி (CBT) மூலம் பாடநெறிகளைக் கற்றல்.
- தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழ் (NVQ) நிலை 03 மற்றும் நிலை 04 பெற்றுக்கொண்டதன் பின்னர் டிப்ளோமா மற்றும் தொழில்நுட்ப பட்டப்படிப்பைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு.
- தெரிவு செய்யப்பட்ட பாடநெறிகளுக்கு மாதாந்த கொடுப்பனவு.
- சலுகை விலையில் இலங்கை போக்குவரத்துச் சபை பயணச்சீட்டுகள்.
- தொழில் ஆலோசனைச் சேவை மற்றும் தொழில்சார் ஆங்கில அறிவு.
- தொழில்முனைவோர் அறிவு.
- தொழில்நுட்ப மேம்பாட்டு அறிவு.
- தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
- மாதாந்த கொடுப்பனவுடன் மேலதிக பயிற்சி.
- உள்நாட்டு / வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான வழிகாட்டல்.

- சுயதொழில் வாய்ப்புகளுக்கான வழிகாட்டல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களைத் தொடங்கத் தேவையான தொழில்முனைவோர் பயிற்சி மற்றும் குறைந்த வட்டி கடன் வசதிகளுக்கான வழிகாட்டல் சேவைகள்
- வணிக ஆலோசனைச் சேவைகள்.
- துறையில் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்கான செயலமர்வுகள் மூலம் அறிவை இற்றைப்படுத்தல்
- பாடநெறிக் காலத்தில் இலவச ஆயுள் காப்பீட்டு வசதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை

இரண்டாவது அரையாண்டுக்காக (யூலை குழு) பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

1. விண்ணப்பதாரியின் பெயர் :..........................................................................................
2. முகவரி :........................................................................................................................
3. வதிவிடம் : ....................................................................................................................
   i. கிராம அலுவலர் பிரிவு :.............................................................................................
   ii. பிரதேச செயலகப் பிரிவு :..........................................................................................
   iii. மாவட்டம் :...............................................................................................................
4. தொலைபேசி இலக்கம் :....................................................................................................
5. பிறந்த திகதி :.................................................................................................................
6. தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம் : ......................................................................
7. பெற்றுக்கொண்டுள்ள அதிகூடிய கல்வி தகைமைகள் : .....................................................
8. தங்களின் விருப்பம் மற்றும் தகைமைகளுக்கேற்ப பயிலுவதற்கு விரும்பும் பாடநெறிகள் மற்றும் நிலையங்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

| *பாடநெறிகளின் குறியீடு (Course Code)* | *பாடநெறி* | *NVQ நிலை* | *ஏற்புடைய நிலையம்* |
|---|---|---|---|
| | 1. | | 1. |
| | 2. | | 2. |
| | 3. | | 3. |

மேற்படி தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதியுரைகின்றேன்.

திகதி:.................................... ....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

தங்களது விண்ணப்பத்தை, பாடநெறி தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்திற்கு அண்மித்த நிலையத்திற்குச் சென்று கையளிக்கலாம். பாடநெறிகள் 2026, யூலை 01 ஆம் திகதி ஆரம்பமாகும்.

## இலங்கைத் தொழில் பயிற்சி அதிகாரசபை

### பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் இரண்டாவது அரையாண்டு (யூலை குழு) - 2026

| *தொ. இல.* | *பாடநெறி குறியீடு (Course Code)* | *தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி* | *NVQ Level 3* | *NVQ Level 4* |
|---|---|---|---|---|
| | | | *பாடநெறி காலம் (மாதம்)* | |
| | | **Automobile Repair & Maintenance**<br>**வாகன பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு** | | |
| 01 | HVO3 | National Certificate - Heavy Vehicle Operator (Fork Lift)<br>கனரக வாகன இயக்குனர் (போக்லிஃப்ட்) -தேசிய சான்றிதழ் | 3 | |
| 02 | AEM 3 | National Certificate - Agricultural Machinery & Equipment Mechanic<br>விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொழில் நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | 12 | |
| 03 | AAM 3 | National Certificate - Automobile Air Conditioning Mechanic<br>மோட்டார் வாகன குளிரூட்டி திருத்துனர் (தேசிய சான்றிதழ்) | 6 | |
| 04 | AAT 4 | National Certificate - Automobile Air Conditioning Technician<br>மோட்டார் வாகன குளிரூட்டல் தொழில்நுட்பவியலாளர் – தேசிய சான்றிதழ் | | 12 |
| 05 | AE 3<br>AE 4 | National Certificate - Automobile Electrician<br>மோட்டார் வாகன மின்சாரவியலாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 12 |
| 06 | AM 4 | National Certificate - Automobile Mechanic<br>தேசிய சான்றிதழ் - மோட்டார் வாகன மெக்கானிக் - தேசிய சான்றிதழ் | 12 | 18 |
| 07 | AP 4 | National Certificate - Automobile Painter<br>வாகன வர்ணப்பூச்சாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 6 |
| 08 | AT 4 | National Certificate - Automobile Technician<br>மோட்டார்வாகன தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | - | 18 |
| 09 | ATi 3<br>ATi 4 | National Certificate - Automobile Tinker<br>வாகனத் தகடு வேலை (டிங்கர்)- தேசிய சான்றிதழ் | 6 | 6 |
| 10 | MCM 3 | National Certificate - Motorcycle Mechanic<br>மோட்டார் சைக்கிள் மெக்கானிக் (இயக்கவியலாளர்) - தேசிய சான்றிதழ் | 6 | |
| 11 | MCT 4 | National Certificate - Motorcycle Technician<br>மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர்- தேசிய சான்றிதழ் | - | 6 |
| 12 | TWM 3<br>TWM 4 | National Certificate – Three-Wheeler Mechanic<br>முச்சக்கர வண்டி மெக்கானிக் (இயக்கவியலாளர்) - தேசிய சான்றிதழ் | 6 | 6 |
| | | **Building & Construction**<br>**கட்டிடம் மற்றும் நிர்மாணம்** | | |
| 13 | ALN 3<br>AL 4 | National Certificate - Aluminium Fabricator<br>அலுமினியப் பிரித்தெடுப்பாளர் (அலுமினியம் ஃபேப்ரிகேட்டர்) - தேசிய சான்றிதழ் | 3/6 | 6 |
| 14 | ALFID 4 | National Certificate - Aluminium Fabrication with Interior Decoration<br>உட்புற அலங்காரத்துடன் கூடிய அலுமினியப் பிரித்தெடுப்பாளர் - தேசிய சான்றிதழ் | | 12 |

| *தொ. இல.* | *பாடநெறி குறியீடு (Course Code)* | *தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி* | *NVQ Level 3* | *NVQ Level 4* |
|---|---|---|---|---|
| | | | *பாடநெறி காலம் (மாதம்)* | |
| 15 | CCM 3<br>CCM 4 | National Certificate - Construction Craftsman (Masonry)<br>கட்டிட நிர்மாணக் கலைஞர் (கொத்தனார்)- தேசிய சான்றிதழ் | 3/6 | 12 |
| 16 | DP 4 | National Certificate – Draughtsperson<br>வரைவாளர்- தேசிய சான்றிதழ் | | 12 |
| 17 | LT 4 | National Certificate - Landscaping Technician<br>நிலப்பரப்பு அலங்காரத் தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | | 6 |
| 18 | LDA 3 | National Certificate - Landscaping Development Assistant<br>நிலப்பரப்பு மேம்பாட்டு உதவியாளர்- தேசிய சான்றிதழ் | 6 | |
| 19 | PL 3<br>PL 4 | National Certificate – Plumber<br>குழாய்ப் பொருத்துநர்- தேசிய சான்றிதழ் | 3/6 | 12 |
| 20 | QS 4 | National Certificate - Quantity Surveying Assistant<br>அளவையியல் உதவியாளர்- தேசிய சான்றிதழ் | | 6 |
| | | **Electrical, Electronic & Telecommunication**<br>**மின்சாரம், மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு** | | |
| 21 | MAW 3 | National Certificate - Electric Mechanic Winder<br>மின்மோட்டார் மற்றும் இயந்திரச் சுருள் சுற்றுபவர்- தேசிய சான்றிதழ் | | 6 |
| 22 | EAMT 4 | National Certificate - Electrical Appliance Maintenance Technician<br>மின்சாதனப் பராமரிப்பு தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | | 12 |
| 23 | EL 3<br>EL 4 | National Certificate – Electrician<br>மின்சாரவியலாளர்- தேசிய சான்றிதழ் | 6 | 12 |
| 24 | EAT 4 | National Certificate - Electronic Appliances Technician<br>மின்னணு உபகரணங்கள் தொழில்நுட்பவியலாளர்- தேசிய சான்றிதழ் | | 12 |
| 25 | MPR 3 | National Certificate - Mobile Phone Repairer<br>கைத்தொலைபேசி பழுதுபார்ப்பவர்- தேசிய சான்றிதழ் | 6 | |
| 26 | SPST 4 | National Certificate - Solar Photovoltaic Systems Technician<br>சூரிய சக்தி ஒளிமின்னழுத்த தொழில்நுட்பவியலாளர்- தேசிய சான்றிதழ் | | 6 |
| 27 | PT 4 | National Certificate – Pneumatic Technician<br>Pneumatic தொழில்நுட்பவியலாளர்- தேசிய சான்றிதழ் | | 12 |
| | | **Food Technology**<br>**உணவு தொழில்நுட்பம்** | | |
| 28 | BAK 4 | National Certificate - Baker/ (Pastry & Bakery)<br>வெதுப்பகக் கலைஞர் (பேக்கரி) - தேசிய சான்றிதழ் | | 6 |
| | | **Gem & Jewellery**<br>**இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள்** | | |
| 29 | JM 4 | National Certificate - Jewellery Maker (Goldsmith)<br>ஆபரணத் தயாரிப்பாளர் (பொற்கொல்லர்)- தேசிய சான்றிதழ் | | 12 |
| 30 | JSS 3 | National Certificate - Jewellery Stone Setter<br>ஆபரணக் கல் பதிப்பாளர்- தேசிய சான்றிதழ் | 6 | |

| தொ. இல. | பாடநெறி குறியீடு (Course Code) | தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி | NVQ Level 3 | NVQ Level 4 |
|---|---|---|---|---|
| | | | பாடநெறி காலம் (மாதம்) | |
| | | **Health and Social Work**<br>**சுகாதாரம் மற்றும் சமூக** | | |
| 31 | CGEL 4 | National Certificate -Caregiver (Elderly Care)<br>பராமரிப்பாளர் (முதியோர் பராமரிப்பு- தேசிய சான்றிதழ்) | | 6 |
| | | **Hotel & Tourism**<br>**ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை** | | |
| 32 | FBA 4 | National Certificate - Food & Beverage Associate<br>உணவு மற்றும் பானங்கள் உதவியாளர்- தேசிய சான்றிதழ் | | 6 |
| 33 | GRO 4 | National Certificate - Guest Relation Officer<br>விருந்தினர் தொடர்பு அதிகாரி- தேசிய சான்றிதழ் | | 6 |
| 34 | FBA 3 | National Certificate – Assistant Food & Beverage Associate<br>உதவி உணவு மற்றும் பானங்கள் உதவியாளர்- தேசிய சான்றிதழ் | 3 | |
| 35 | PC 4 | National Certificate - Professional Cookery<br>தொழில்முறை சமையற்கலை- தேசிய சான்றிதழ் | | 6 |
| 36 | RA 3 | National Certificate – House Keeping Services<br>இல்லப்பராமரிப்பு சேவைகள்- தேசிய சான்றிதழ் | | 6 |
| | | Information Communication & Multimedia Technology<br>தகவல் தொடர்பாடல் மற்றும் பல் ஊடகத் தொழில்நுட்பம் | | |
| 37 | CHNT IT (A+) 4 | National Certificate – Computer Hardware & Network Technician with CISCO IT Essential (A+) கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு தொழில்நுட்பவியலாளர் (CISCO IT Essential (A+) உடன்) -தேசிய சான்றிதழ் | | 12 |
| 38 | APCGD 4 | National Certificate – Adobe Certified Professional / Graphic Designer அடோப் சான்றளிக்கப்பட்ட தொழில்முறை / வரைகலை வடிவமைப்பாளர் – தேசிய சான்றிதழ் | | 6 |
| 39 | CGD 4 | National Certificate - Graphic Designer<br>வரைகலை வடிவமைப்பாளர்- தேசிய சான்றிதழ் | | 6 |
| 40 | CHDHI 4 | National Certificate - Graphic Designer (Hearing Impaired)<br>வரைகலை வடிவமைப்பாளர் (செவிப்புலன் குறைபாடுடையோர்)- தேசிய சான்றிதழ் | | 6 |
| 41 | CHT 4 | National Certificate - Computer Hardware Technician<br>கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்- தேசிய சான்றிதழ் | | 6 |
| 42 | CHTC IT (A+) 4 | National Certificate - Computer Hardware Technician with CISCO IT Essential / A Puls கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் (CISCO IT Essential / A Plus உடன்) -தேசிய சான்றிதழ் | | 6 |
| 43 | NTC 4 | National Certificate – CISCO CCNA / Network TechnicianCISCO CCNA / வலையமைப்பு தொழில்நுட்பவியலாளர் -தேசிய சான்றிதழ் | | 1440Hrs |

| *தொ. இல.* | *பாடநெறி குறியீடு (Course Code)* | *தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி* | *NVQ Level 3* | *NVQ Level 4* |
|---|---|---|---|---|
| | | | *பாடநெறி காலம் (மாதம்)* | |
| 44 | ICT 4 | National Certificate - Information and Communication Technology Technician<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | | 6 |
| 45 | ICT 3 | National Certificate – Computer Application Assistant<br>கணினி பயன்பாட்டு உதவியாளர் - தேசிய சான்றிதழ் | 4 | |
| 46 | | National Certificate – Computer Application Assistant (Disabled)<br>கணினி பயன்பாட்டு உதவியாளர் (மாற்றுத்திறனாளிகளுக்கானது)- தேசிய சான்றிதழ் | 12 | |
| 47 | MDA 4 | National Certificate - Multimedia Designing Associate<br>பல் ஊடக வடிவமைப்பு உதவியாளர்- தேசிய சான்றிதழ் | | 12 |
| 48 | SD 4 | National Certificate - Software Developer<br>மென்பொருள் உருவாக்குநர்- தேசிய சான்றிதழ் | | 12 |
| 49 | WD 4 | National Certificate - Web Developer<br>இணையத்தள உருவாக்குநர் -தேசிய சான்றிதழ் | | 6 |
| | | Leather & Footwear<br>தோல் மற்றும் பாதணிகள் | | |
| 50 | LPC 3 | National Certificate - Leather Product Craftsman<br>தோல் உற்பத்திப் பொருட்களை மேற்கொள்பவர் - தேசிய சான்றிதழ் | 6 | |
| | | Metal & Light Engineering<br>உலோகம் மற்றும் மென் பொறியியல் | | |
| 51 | FM 3<br>FM 4 | National Certificate - Fabricator (Metal)<br>உலோகப் பிரித்தெடுப்பாளர் (மெட்டல் / பெப்ரிகேட்டர்)- தேசிய சான்றிதழ் | | 12 |
| 52 | M-CML 4 | National Certificate - Machinist (CNC Milling & Lathe Operator)<br>இயந்திரவினைஞர் (CNC Milling & Lathe Operator) - தேசிய சான்றிதழ் | | 6 |
| 53 | M-CM 4 | National Certificate - Machinist (CNC Milling Operator)<br>(CNC Milling) - இயந்திரவினைஞர் (CNC Milling & Lathe Operator) - தேசிய சான்றிதழ் | | 6 |
| 54 | M 3<br>M 4 | National Certificate - Machinist<br>இயந்திரவினைஞர் -தேசிய சான்றிதழ் | 12 | 12 |
| 55 | WE 3<br>WE 4 | National Certificate – Welder<br>வெல்டர் (பற்றவைப்பவர்)- தேசிய சான்றிதழ் | 6 | 12 |
| 56 | WEGAM 4 | National Certificate - Welder (GAS/ARC/TIG/MAG)<br>வேல்டர் (GAS/ARC/TIG/MAG) - தேசிய சான்றிதழ் | | 12 |

| *தொ. இல.* | *பாடநெறி குறியீடு (Course Code)* | *தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி* | *NVQ Level 3* | *NVQ Level 4* |
|---|---|---|---|---|
| | | | *பாடநெறி காலம் (மாதம்)* | |
| | | Office Management<br>அலுவலக முகாமைத்துவம் | | |
| 57 | SEC 4 | National Certificate - Secretary (Secretarial Practice)<br>செயலாளர் (செயலகப் பயிற்சி) - தேசிய சான்றிதழ் | | 12 |
| | | Personal & Community Development<br>தனிநபர் மற்றும் சமூக மேம்பாடு | | |
| 58 | CHC 4 | National Certificate - Child Caregiver<br>குழந்தை பராமரிப்பாளர்- தேசிய சான்றிதழ் | | 6 |
| 59 | BC 4 | National Certificate – Hair Dresser<br>முடி அலங்கரிப்பாளர் - தேசிய சான்றிதழ் | | 4 |
| | | Printing & Packaging<br>அச்சிடுதல் மற்றும் பொதியிடல் | | |
| 60 | OLMO 3 | National Certificate - Offset Machine Operator<br>ஓப்செட் (Offset) இயந்திர இயக்கி- தேசிய சான்றிதழ் | 6 | 6 |
| | | Ref & Air-conditioning<br>குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் | | |
| 61 | RAM 3 | National Certificate - Refrigeration & Air-conditioning Mechanic<br>குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் இயந்திரவியலாளர்- தேசிய சான்றிதழ் | 12 | |
| 62 | RAT 4 | National Certificate - Refrigeration & Air-conditioning Technician<br>குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் தொழில்நுட்பவியலாளர்- தேசிய சான்றிதழ் | | 12 |
| | | Textile & Garment<br>துணி மற்றும் ஆடைத்தொழில் | | |
| 63 | ADT 4 | National Certificate - Apparel Design Technician<br>ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | | 12 |
| 64 | BA 3 | National Certificate - Batik Artist<br>பத்திக் கலைஞர் - தேசிய சான்றிதழ் | 6 | |
| 65 | DMT 3<br>DMT 4 | National Certificate - Dress Maker / Tailor<br>ஆடைத் தயாரிப்பாளர் / தையற்கலைஞர் - தேசிய சான்றிதழ் | 6 | 6 |
| 66 | ISMM 3<br>ISMM 4 | National Certificate - Industrial Sewing Machine Mechanic<br>கைத்தொழில் தையல் இயந்திரவியலாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 6 |

| தொ. இல. | பாடநெறி குறியீடு (Course Code) | தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி | NVQ Level 3 | NVQ Level 4 |
|---|---|---|---|---|
| | | | பாடநெறி காலம் (மாதம்) | |
| 67 | ISMO 3 | National Certificate - Industrial Sewing Machine Operator<br>கைத்தொழில் தையல் இயந்திர இயக்குநர் - தேசிய சான்றிதழ் | 4 | |
| 68 | PM 4 | National Certificate - Pattern Maker<br>மாதிரி வடிவமைப்பாளர் (Pattern Maker) - தேசிய சான்றிதழ் | | 6 |
| 69 | PSS 4 | National Certificate - Production Supervisor (Sewing)<br>உற்பத்தி மேற்பார்வையாளர் (தையல்) - தேசிய சான்றிதழ் | | 6 |
| 70 | QAS 4 | National Certificate - Quality Assurance Supervisor (Apparel Production)<br>தரச் சான்றிதழ் மேற்பார்வையாளர் (ஆடை உற்பத்தி) - தேசிய சான்றிதழ் | | 6 |
| 71 | SCR 3 | National Certificate - Screen Printer<br>திரை அச்சிடுபவர் (Screen Printer) - தேசிய சான்றிதழ் | 6 | |
| 72 | TG 3<br>TG 4 | National Certificate - Tailor (Gents)<br>தையல்காரர் (ஆண்) - தேசிய சான்றிதழ் | 6 | 6 |
| 73 | IEO 4 | National Certificate - Industrial Engineering Officer (Work-Study)<br>கைத்தொழில் பொறியியல் உத்தியோகத்தர் (வேலை-படிப்பு) – தேசிய சான்றிதழ் | | 6 |
| | | Wood Related<br>மரம் சார்ந்தது | | |
| 74 | WCA 3 | National Certificate - Wood Carving Artist<br>மரச் செதுக்கல் கலைஞர் - தேசிய சான்றிதழ் | 6 | 6 |
| 75 | WCB 3 | National Certificate - Wood Craftsman (Building)<br>மரவேலை கலைஞர் (கட்டிடம்) - தேசிய சான்றிதழ் | 6 | 12 |
| 76 | WCBAL 3<br>WCBAL 4 | National Certificate - Wood Craftsman (Building) with relevant Aluminum Modules<br>மரவேலை கலைஞர் (தளபாடங்கள்) - தொடர்புடைய அலுமினியப் பாடநெறிகளுடன் -தேசிய சான்றிதழ் | 6 | 12 |
| 77 | WCF 3<br>WCF 4 | National Certificate - Wood Craftsman (Furniture)<br>மரவேலை கலைஞர் (தளபாடங்கள்)- தேசிய சான்றிதழ் | 3/6 | 12 |
| 78 | WCFAL 3<br>WCFAL 4 | National Certificate - Wood Craftsman (Furniture) with relevant Aluminum Modules<br>மரவேலை கலைஞர் (தளபாடங்கள்) - தொடர்புடைய அலுமினியப் பாடநெறிகளுடன் – தேசிய சான்றிதழ் | 6 | 12 |

| தொ. இல. | பாடநெறி குறியீடு (Course Code) | தொழில் பயிற்சி துறை பிரகாரம் செயற்படும் பாடநெறி | NVQ Level 5 கற்கைநெறிக்காலம் மணித்தியாலம் |
|---|---|---|---|
| 79 | COSM 5 | National Diploma - Cosmetology<br>தேசிய டிப்ளோமா - அழகுக்கலை | 840Hrs |
| 80 | QS 5 | National Diploma - Quantity Surveying<br>தேசிய டிப்ளோமா - கணிய அளவையியல் | 12 |
| 81 | ICT 5 | National Diploma -Information and Communication Technology NVQ Level 05<br>தேசிய டிப்ளோமா - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (NVQ மட்டம் 05) | 12 |
| 82 | | National Diploma – Automobile Technology<br>தேசிய டிப்ளோமா - மோட்டார் வாகன தொழில்நுட்பம் | 18 |
| 83 | RT 6 | National Diploma – Automation and Robotic Technology<br>தேசிய டிப்ளோமா - தன்னியக்க மற்றும் ரொபொடிக் தொழில்நுட்பம் | 30 |
| 84 | EL 5 | National Diploma – Electrical Technology<br>தேசிய டிப்ளோமா - மின்சாரத் தொழில்நுட்பம் | 18 |
| 85 | ELT 6 | National Diploma – Electronic Technology<br>தேசிய டிப்ளோமா - மின்னணுத் தொழில்நுட்பம் | 30 |
| 86 | FPT 5 | National Diploma – Fluid Power Technology (Hydraulic & Pneumatic)<br>தேசிய டிப்ளோமா - திரவ சக்தி தொழில்நுட்பம் (நீரியல் மற்றும் Pneumatic ) | 18 |
| 87 | MT 5 | National Diploma – Mechatronics Technology<br>தேசிய டிப்ளோமா - மெக்கட்ரானிக்ஸ் தொழில்நுட்பம் | 18 |
| 88 | CNC 5 | National Diploma – Computer Numerically Controlled Manufacturing Technology (CNC Technology)<br>CNC தேசிய டிப்ளோமா - கணினி எண்முறை கட்டுப்பாட்டு உற்பத்தித் தொழில்நுட்பம் (CNC தொழில்நுட்பம்) | 18 |
| 89 | WT 5 | National Diploma – Welding Technology<br>தேசிய டிப்ளோமா - பற்றவைப்புத் தொழில்நுட்பம் (வெல்டிங்) | 18 |
| 90 | RACT 5 | National Diploma – Refrigeration and Air Conditioning Technology<br>தேசிய டிப்ளோமா - குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் தொழில்நுட்பம் | 18 |
| ஏனையவை<br>Others | | | |
| 91 | DIPIM | Diploma in Industrial Management<br>கைத்தொழில் முகாமைத்துவ டிப்ளோமா | |
| 92 | LO (SK) | Logistics Operations (Store Keeper) | 6 |
| 93 | LT (WC) | Logistic Technician (Wharf Clerk) | 6 |

6-108

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.